மலர்-2 இதழ்-25 செப்டம்பர் 1-15 இலவச புத்தகம் www.aanmeegamalar.com

ஆன்மிகமலர் டிரஸ்ட் வெளியீடு

# ஆன்மிகமலர் மெயில் புக்

ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!!

மாதமிருமுறை

உலக வரலாற்றில் முதன்முறையாக இமெயிலில் வெளிவரும் புத்தகம்



25வது இதழ்

நன்மை மட்டுமே செய்யும் குரு

# தமிழ்மாதப் பௌர்ணமியில் அம்மனுக்குகந்த வழிபாடு

# சிறப்பு வாய்ந்த பஞ்ச துவாரகை

## முன்வினை பின்வினையின் பலன்கள்

மகாவிஷ்ணு எடுத்த அவதாரங்களில் ராமாவதாரமும் கிருஷ்ணாவதாரமும் மிகவும் போற்றப்படுகின்றன. இந்த இரண்டு அவதாரங்களும் "முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும்'' என்பதை மிக அழகாக சித்தரிக்கின்றன.

"ஒருவர் செய்யும் மகா பாவமானது அந்த ஜென்மத்தில் மட்டுமல்ல; அடுத்த பிறவியிலும் தொடர்ந்து வதைக்கும்'' என்பதைச் சொல்கிறது ஸ்ரீகிருஷ்ணாவதாரம்.

பகவான் கிருஷ்ணர் மதுரா சிறைச்சாலையில் பிறந்தாலும், அவர் ஆட்சி புரிந்தது துவாரகை திருத்தலத்தில்தான்.



முன்னதாக, கிருஷ்ணர் மதுராவில் கம்சனை அழித்த போது, அதைக் கேள்விப்பட்ட கம்சனின் மாமன் மதுராமீது போர் தொடுத்தான்; தோல்வியுற்றான்.

போர் காரணமாக மதுராவின் கோட்டை வலுவிழந்து விட்டது. எனவே வேறொரு பாதுகாப்பான இடத்திற்கு செல்ல எண்ணினார் கிருஷ்ணர். அதன்படி கருடன் தேர்ந்தெடுத்துக் கொடுத்த இடம்தான் துவாரகை. பிற்காலத்தில் ரிஷிகளின் சாபம் காரணமாக யாதவ குலமே அழிந்தது. துவாரகா நகரின் பெரும் பகுதியும் கடலின் எழுச்சியால் மூழ்கியது என்று வரலாறு கூறுகிறது. தற்போது புனிதத் தலமாகப் போற்றப் படும் ஆதிதுவாரகையின் நிழலாக ஐந்து திருத்தலங்கள் விளங்குகின்றன. அந்தத் திருத்தலங்களை "பஞ்ச துவாரகா' என்பர்.

1. மோட்ச துவாரகை, 2. பேட் துவாரகை, 3. ஸ்ரீநாத் துவாரகை, 4. டாஸ்ரோடி துவாரகை, 5.மூலத்துவாரகை எனப்படும்.

### மோட்ச துவாரகை:

இத்தலம்தான் வைகுண்டம் செல்லும் நுழை வாயிலாகக் கருதப்படுகிறது.

108 வைணவத் திருத்தலங்களில் இத்தலம் 104ஆவது திவ்ய தேசமாகும். இத்தலம் குஜராத் மாநிலத்தில் உள்ள "ஓசா'' துறைமுகத்திற்கு அருகில், "கோமதி'' என்னும் புண்ணிய நதிக்கரையில் அமைந்துள்ளது.

இங்குள்ள ஸ்ரீகிருஷ்ணர் ஆலயம் சுமார் ஆயிரத்து ஐந்நூறு ஆண்டுகள் பழமையானது என்று வரலாற்று ஆசிரியர்கள் கூறுகிறார்கள். இங்கு அருள்புரியும் பகவான் கிருஷ்ணரை துவாரகாநாத்ஜி, கல்யாண நாராயணர் என்று வழிபடுகிறார்கள். இங்குள்ள மூலவர் சங்கு சக்கர தாரியாக, நான்கு கரங்கள் கொண்டு சேவை சாதிக்கிறார். பகவான் கிருஷ்ணருக்கு காலை ஐந்து மணி முதல் இரவு வரை பதினேழு முறை பிரசாதம் சமர்ப்பித்து, மணிக்கு ஒருமுறை ஆடை மாற்றி அலங்கரிக்கிறார்கள்.

காலை திருப்பள்ளியெழுச்சி தொடங்கி சயனம் வரை இந்நிகழ்ச்சிகள் நடைபெறும். காலையில் தங்கப்பல் குச்சியால் பற்களைத் துலக்கு வார்கள். பிறகு, லட்டும் ஜிலேபியும் சமர்ப்பிப்பார்கள். பிறகு ஏழரை மணிக்குள் தீர்த்தமும் பிரசாதமும் படைப்பார்கள். எட்டு மணிக்கு சர்க்கரை, பால், தயிர் படைக்கப்படுகிறது. பிறகு, அப்பம், பாலில் கலந்த சிற்றுண்டியுடன் திருவமுது படைக்கப்படுகிறது.

அதற்குப்பின், கனிவகைகள். இப்படி பிரசாதங்களைத் தொடர்ந்து அளித்தபின் உணவு செரிக்க லேகியமும் கொடுக்கிறார்கள்.

### பேட் துவாரகை:

இத்தலம் கடலிலுள்ள தீவுபோல் இருப்பதால் தீவுத்துவாரகை என்றும் அழைக்கிறார்கள். இங்குள்ள அரண்மனை, பகவான் கிருஷ்ணன் வாழ்ந்த அரண்மனை எனப்படுகிறது. இங்கு கடலுக்குள் அகழ்வாராய்ச்சி செய்வோருக்கு பல அற்புதப் பொருட்கள் கிடைத்துக் கொண்டிருப்பதாகக் கூறுகிறார்கள்.

### ஸ்ரீநாத் துவாரகை:

இத்தலம் குஜராத் மாநிலம், போர்பந்தர் என்னும் ஊரிலிருந்து 22 கிலோமீட்டர் தூரத்தில் உள்ளது. இங்கு கோவில் கொண்டு அருள் புரியும் பகவான் கிருஷ்ணருக்கு தினமும் எட்டு வேளை வழிபாடுகள் நடைபெறுகின்றன. இங்கு பகவானுக்கு வைரம், வைடூரியம் முதலான நவரத்தினங்கள் பதித்த திருவாபரணங்கள் தினமும் அணிவிக்கப்படுகின்றன.

### டாஸ்ரோடி துவாரகை:

இத்தலம் துவாரகையிலிருந்து சுமார் 15 கிலோமீட்டர் தூரத்தில் உள்ளது. பகவான் கிருஷ்ணர் அவதரித்த சிறைச்சாலை அமைந்த ஊரான வடமதுராவிலிருந்து, பாதாளம் வழியாக தீர்த்தம் நதியாகப் பாய்ந்து இந்த ஊருக்கு வருவதாகக் கூறப் படுகிறது.

### மூலத்துவாரகை:

இத்தலம் போர்பந்தரிலிருந்து சுமார் 22 கிலோமீட்டர் தூரத்திலுள்ள கொஷனார் என்னும் ஊருக்கு அருகில் கடற்கரையோரம் அமைந்துள்ளது.



இத்தலத்தில்தான் பகவான் பல ஆண்டுகள் அரசாண்டார். இங்கிருந்துதான் கிருஷ்ணர் வைகுண்டம் சென்றார் என்றும்; அதன்பின் இத்தலம் கடலில் மூழ்கியது என்றும் கூறுவர். மூலத்துவாரகையில் அனைத்து முக்கிய நதிகளும் சங்கமமாகின்றன.

## முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும்

துவாரகையை ஆட்சிபுரிந்த கண்ணன் தெய்வமாக இருந்தாலும், பூலோகத்தில் மானிடராக அவதரித்ததால் முக்தி (மரணம்) என்பது தவிர்க்க முடியாதது. தன் இறுதிக் காலம் நிறைவுறப் போகிறது என்பதை அறிந்த பகவான் ஒருநாள் ஹிரண்ய நதிக்கரையினையொட்டி அடர்ந்த புதர்கள் நிறைந்த குரா மரத்தடியில் கால்களை நீட்டி ஓய்வெடுத்துக் கொண்டிருந்தார். அப்போது “ஜரா’ என்ற வேடன் ஒரு காட்டு முயலைத் துரத்திக் கொண்டு வந்தான். அது புதர்ப் பகுதியில் ஓடி மறைந்தது. அந்த வேளையில் கிருஷ்ணரின் கால்களில் ஒன்று வேடன் கண்களுக்கு முயல்போல் தெரிய, மறைந்திருந்து அம்பு எய்தான். அந்த அம்பு பகவானின் வலது குதிங்காலில் பலமாகத் தைத்ததும், “ஆ’ என்ற அலறல் சத்தம் கேட்டு பதறினான் வேடன்; ஓடோடி வந்தான். அங்கே பகவான் கிருஷ்ணர் காலில் அம்பு தைக்கப்பட்டு, உயிருக்குப் போராடிக் கொண்டிருப்பதைக் கண்ட வேடன், “பகவானே! உங்கள் பாதம் எனக்கு முயல்போல் தெரிந்ததால் மறைந் திருந்து அம்பு எய்தேன். என்னை மன்னித்து விடுங்கள்’’ என்று கதறினான்.

“வேடனே, வருந்தாதே. நாம் செய்த பாவங்கள் நம்மைப் பின்தொடர்ந்து வரும். தெரியாமல் செய்த பாவங்களை இப்பிறவியிலேயே பரிகாரங்கள் மூலம் நிவர்த்தி செய்திடலாம். ஆனால் தெரிந்து செய்த பாவங்களை எந்த வழிபாடுகளாலும் நிவர்த்தி செய்ய முடியாது. அதற்கு நானே உதாரணம்.

திரேதாயுகத்தில் நான் ராமனாக அவதரித்த போது, வாலியை மறைந்திருந்து அம்பு எய்து கொன்றேன். அப்போது வாலி, “ராமா, எனக்கும் உனக்கும் என்ன பகை? எங்கள் விலங்கினத்தில் ஒரு பெண்ணை கடத்திச் செல்வது சகஜம். ஆனால், நீ என்னைத் தவறாகப் புரிந்துகொண்டாய். என்னிடம் நேருக்கு நேர் போர்புரிய முடியாது என்பதை அறிந்து, மறைந்திருந்து என்னை வீழ்த்தினாய். இதே நிலைமை உனக்கு என்னால் ஏற் படும். தர்மம் என்று ஒன்றிருந்தால், எத்தனை காலமானாலும் உன்னை மறைந்திருந்து வீழ்த்துவேன்’ என்று வேதனையுடன் சாபமிட்டான். அந்த சாபம்தான் இன்று பலித்தது.

தெய்வமாக இருந்தாலும் சிறிதளவு நெறி தவறினால் துன்பத்தை அனுபவித்தே தீர வேண்டும் என்பது பொது விதியாகும். இதற்கு எந்தவிதமான பரிகாரங்களும், யாகங் களும், தானதர்மங்களும், வழிபாடுகளும் கைகொடுக்



காது. அதைத்தான் நான் இப்போது அனுபவிக்கிறேன். வேடனே, நீதான் அந்த வாலி. உன் சாபத்தினை நிறைவேற்றிவிட்டாய். முன் ஜென்ம நிகழ்வுகள் எதுவும் பூலோகத்தில் பிறந்தவர்களுக்கு நினைவுக்கு வராது. அதனால் உனக்கு இது தெரியவில்லை. என் அவதாரம் இன்றுடன் முடிந்தது. நீ நீடூழி வாழ்வாயாக’’ என்று வாழ்த்தி விட்டு முக்தியடைந்தார் பகவான் கிருஷ்ணர்.

ஒருவருக்கு நாம் செய்யும் தீமை, மீண்டும் நமக்கே வந்துசேரும் என்னும் பேருண்மையை பகவான் தன் இரு அவதாரங்கள் மூலம் மனித குலத்துக்கு உணர்த்தியுள்ளார்.

எனவே, நல்லதே நினைப்போம்; நல்லதே செய்வோம்.





# கடவுள், ஆசிரியர் மற்றும் கடவுளின் பக்தனுக்கு முன்னால் காலை நீட்டித் தூங்குதல் கூடாது

நல்ல ஒழுக்கமும், உயர்ந்த பக்தியும் கொண்டவர் களிடம் இருந்து மட்டும் உணவைப் பெற்று மகிழுங்கள். ஒரு கடவுள் வணக்கமே மேலானது, பிற தெய்வங்களை வணங்குதல் பாவமாகும்.

கடவுளின் பக்தர்களுக்கு பணி செய்வதால் தான் கடவுளை அடைய முடியும் என்பதை உங்கள் இதயத்தில் நிறுத்திக் கொள்ளுங்கள்.



கடவுளுடைய பக்தர்களுக்குப் பணி செய்யத் தன் னையே எவன் தியாகம் செய்யாமல் இருக்கிறானோ, அவன் சிறந்தவனாக இருந்தாலும் அழிந்து விடுவான்.

தன் உறவினர்களை எப்படி நேசிக்கிறீர்களோ அவ் வாறே கடவுளின் பக்தர்களைப் பாடி மகிழ வேண்டும்.

காலையில் எழும்போது ஆன்மீகச் சொற்களை உச்சரித்துப் பழக வேண்டும்.

கடவுளுக்கு முன்னால், ஆசிரியருக்கு முன்னல் கடவுளின் பக்தனுக்கு முன்னால் காலை நீட்டித் தூங்குதல் கூடாது.

கோயில், விமானம், கோபுரம் ஆகியவற்றைக் கண்டதும் மரியாதையுடன் தலைவணங்குதல் வேண்டும்.

ஒருவனுடைய பிறப்பைப் பற்றியோ, தொழிலைப் பற்றியோ எண்ணாமல் அவனுடைய கொள்கை களைப் பின்பற்றி பணிவிடை செய்வதே மேலான தாகும்.

– ராமானுஜர்

## கொடிய பாவத்தையும் போக்கி சந்ததியினரை காக்கு சோமவார பிரதட்சிண அமாவாசை

மாதந்தோறும் வரும் அமாவாசைகளில் திங்கட்கிழமை அன்று அமையும் அமாவாசைக்கு, “பிரதட்சிண அமாவாசை” என்று பெயர். இந்நாளில் அரச மரம், அரசுடன் இனைந்த வேப்ப மரம், அரசு, அத்திமரம், பனைமரம் இணைந்த தலங்களில், இதனைச் சுற்றிக் குறைந்தது 16, 32, 64, 108 முறை “விருட்சப் பிரதட்சிணம்” செய்தால் (மரத்தைச் சுற்றிவந்தால்) பன்மடங்காய்ப் பலங்களைப் பெறலாம்.

இப் பிரதட்சிண அமாவாசை பிதுர் தோஷங்களை அகற்றும், உற்றம், சுற்றத்தில் உள்ள மனக் கசப்புகளைத் தீர்த்து மன அமைதியைத் தரும்.

மிகக் கொடூரமாய்த் தீய செயல்களைப் புரிந்து பூமியில் வாழ்ந்து மறைந்தவர்களாக இருந்தால் அவர்களின் பலன் கொடிய நரகம் என்று புராணங்கள் கூறுகிறது.



அப்படிப்பட்ட நரக வாசம் அனுபவிப் பவர்களுக்கு நல் பலன் கிடைக்க வேண்டுமானால், சோமவார அஸ்தவப் பிரதட்சிண பூஜைகளைச் செய்தால் அக்கொடியவர்களுக்கு நல்ல பலன் கிடைக்கும் என்று கூறுப்படுகிறது.

முன்னோர்கள் செய்த தீவினைக் கர்மங்கள், தற்போதைய சந்ததியினரைத் தாக்காமல் காக்க வேண்டுமானால், சோமவார பிரதட்சிண அமாவாசை வழிபாடு செய்தால் உடனடிப் பலன் கிடைக்கும் என்று புராணங்கள் கூறுகிறது.

# கல்வி, செல்வம், திருமணம், குழந்தை பாக்கியம் தரும் குருபகவான்



பிரம்மதேவர் படைப்புத் தொழிலில் தனக்கு உதவிபுரிய சப்த ரிஷிகளை உருவாக்கினார். அந்த ஏழு ரிஷிகள் மூலம் மனித, அசுர இனங்கள் தோன்றின. அந்த ஏழு ரிஷிகளில் ஆங்கிரஸ முனிவரின் மகன்தான் வியாழபகவான் எனும் குருபகவான்.

குருபிரகஸ்பதி என்பவர் தேவர்களின் குருவும், நவகிரகங்களில் ஒருவரும் ஆவார். இவருக்கு தாரை என்ற மனைவியும் உண்டு. இவர் நான்கு வகையான வேதங்களையும், அறுபத்து நான்கு கலைகளையும் அறிந்தவர்.

வாழ்வில் உயர்ந்த இடத்தை அடையவேண்டும் என்று லட்சியம் கொண்ட பிரகஸ்பதி நான்கு வகை வேதங்களையும் கற்று, பல யாகங்களும் ஹோமங்களும் செய்தார். அஸ்வமேத யாகம் போன்ற சிறந்த யாகங்களை நூற்றுக்கும்மேல் செய்தார். இப்படி சிறப்பான ஹோமங்களைச் செய்து மிகச்சிறந்த முறையில் தேர்ச்சி பெற்றவர்களில் ஒருவர்தான் தேவர்களுக்கு குருவாக முடியும். அதன்படி தேர்வு பெற்று பிரகஸ்பதி தேவர்களுக்கு குருவானார்.

அத்துடன் அவர் திருப்தி அடைந்துவிடவில்லை. தேவ குருவைவிட சிறப்பான இடத்தை அடைய மேலும் பல அரிய ஹோமங்களும் யாகங்களும் செய்ததுடன், திட்டை தலத்துக்கு வந்து, அங்கு கோவில் கொண்டுள்ள வசிஷ்டேஸ்வரரைக் குறித்து கடுந்தவம் புரிந்தார். அவர் தவத்துக்கு மெச்சிய சிவபெருமான் அவருக்கு நவகிரக பதவியை வழங்கினார். இதனால் வியாழன் கிரகம் ராஜகிரகம் என்று அழைக்கப்படுகிறது.

திட்டைத் தலத்தில் குருவிற்கு நவக்கிரகங்களில் குருபதவி கிடைத்ததால், திட்டைத்தலம் குருவிற்கு உகந்த தலமாக விளங்குகிறது.

இவர் இடம் பெயர்வதே குரு பெயர்ச்சி என்று வழங்கப்படுகிறது. இவருக்கு அந்தணன், அமைச்சன், அரசன், ஆசான், ஆண்டளப்பான், குரு, சிகிண்டிசன், சீவன், சுரகுரு, தாராபதி, தெய்வமந்திரி, நற்கோள், பிரகஸ்பதி, பீதகன், பொன்னன், மறையோன்,வேதன், வேந்தன் என பதினெட்டு பெயர்கள் உள்ளன.

## தேவகுரு, அசுர குரு

குருபகவானைப் போன்று இன்னொரு கிரகத்திற்கும் ராஜ கிரகம் என்ற பெயர் உண்டு. புராணங்களில் ராஜகிரகம் என்று குருபகவானையும், சுக்கிரனையும் குறிப்பிடப்படுகிறது.

இந்த இரண்டு கிரகங்களும் அனைத்து வேதங்களையும் அறிந்த கிரகங்கள் என்று சொல்லப்பட்டிருக்கிறது. 4 வேதங்கள், 64 கலைகள் என அனைத்தையும் அறிந்த கிரகங்கள் என்று சொல்லப்பட்டிருக்கிறது. அசுர குருவான சுக்ரன் இறந்தாரை எழுப்புவிக்கும் சஞ்சீவி மந்திரத்தை அறிந்தவர். இதனால் இவ்விரு கிரகத்தையும் ராஜ கிரகங்கள் என போற்றப்படுகிறது.

மானிட பிறப்பு நல்லவறை நோக்கியே செல்ல வேண்டும் என்ற கொள்கையைக் கொண்டுள்ளதால், நவகிரகங்களில் குருபகவானை பின்தொடரும் வழக்கம் உண்டாயிற்று. மானிட அறிவிற்கு தேவையான அனைத்தையும் தேவ குருவால் வழங்க முடியும், எந்த வேதத்தில், எந்த மொழியாயிருந்தாலும் அவற்றிற்கு தேவகுருவே பிரதானம் என்பதால் தேவகுருவை மானிட வம்சம் பின்பற்றி செல்கிறது.

தேவகுருவாக விளங்கும் குருபகவானும், அசுர குருவாக விளங்கும் சுக்கிரனும் சம பலம் பெற்றவர்கள் என்றாலும், அசுர குல உயர்விற்கு முக்கிய காரணமாக விளங்கியதால் அசுர குருவிற்கு மானிட வம்சம் அவ்வளவு முக்கியத்துவம் தரவில்லை என்றே கூறப்படுகிறது.

தேவகுருவான குருபகவானின் சொந்த வீடுகள் தனுசு மற்றும் மீனம். ஒளி படைத்த ஞானிகளையும், மேதைகளையும் உருவாக்குபவர் இவர். புனர்பூசம், விசாகம், பூரட்டாதி ஆகியவை


ஆன்மிகமலர் மெயில் புக்

www.aanmeegamalar.com

# குருபகவான் வேறு தட்சிணாமூர்த்தி வேறு

சிவபெருமானின் அவதாரங்களில் ஒன்று தட்சிணாமூர்த்தி அவதாரமாகும். இவரை அனைத்து கோள்களுக்கும் அதிபதியாகவும், அனைத்து கிரகங்களுக்கு தலைவராகவும் திகழ்கிறார். இவரை ஆதிகுரு எனவும் புராணங்கள் கூறுகின்றன.

தட்சிணாமூர்த்தியை வழிபடுபவர்களுக்கு அருளையும், ஞானத்தையும் வழங்கக்கூடியவர். எல்லா சிவன் கோவில்களிலும் தென் கோஷ்டத்தில் இவர் எழுந்தருளியிருப்பார். குரு பகவான் இல்லாத திருக்கோவில்களில் தட்சிணாமூர்த்தியையே குருவாக பாவித்து வழிபடுகின்றனர். ஆனால் குரு வேறு; தட்சிணாமூர்த்தி வேறு.

குருபெயர்ச்சியில் குருவுக்கு செய்யும் பரிகாரங்களை குருவுக்கே செய்யவேண்டும்.

## குருபகவானுக்கும் தட்சிணாமூர்த்திக்கும் உள்ள வேறுபாடு:

**குருபகவான்:** குருவால் ஏற்படும் தோஷங்களுக்கு குருவையே வழிபடவேண்டும். உலகம் முழுவதும் உள்ள பணம், பொன் விஷயங்களுக்கு குருவே அதிபதி.

குரு பகவான் நவகோள்களில் குரு என்ற வியாழனாக இருந்து உயிர்களுக்கு அவை முன் ஜென்மங்களில் செய்த நல் வினை தீவினைகளுக்கான பலாபலன்களை இடமறிந்து காலமறிந்து கொண்டு சேர்ப்பவர்.

குரு ஒன்பது கோள் தேவதைகளில் 5 ஆம் இடத்தில் அங்கம் வகிப்பவர்.

குருவோ உதயம் அஸ்தமனம் என்ற தன்மைகள் உடையவர்.

**தட்சிணாமூர்த்தி:** தட்சிணாமூர்த்தி கல்லாலின் கீழ் அமர்ந்து நான் மறைகளோடு ஆறு அங்கங்களையும் சனகர், சனந்தனர், சனாதனர், சனற்குமாரர் என்ற நான்கு பிரம்மரிஷிகளுக்கு போதிப்பவர்.



தெட்சிணாமூர்த்தி 64 சிவவடிவங்களில் ஒருவர், சிவன் தோன்றுதல் மறைதல் என்ற தன்மைகள் இல்லாதவர்.

மேற்கண்ட பல்வேறுபாடுகள் தெளிவாக இருக்கும்போது குரு என்ற ஒற்றைச் சொல்லை மட்டும் வைத்துக்கொண்டு அவர்தான் இவர் இவர்தான் அவர் என்று வாதிடுவது சரியல்ல... தெட்சிணாமூர்த்தியை தட்சிணா மூர்த்தியாக (சிவகுருவாக) வழிபடுங்கள்.

சில ஆலயங்களில் தட்சிணா மூர்த்தியை குரு பகவான் என்றே மாற்றி விட்டார்கள். அதற்கே அனைத்து பரிகார பூஜைகளையும் செய்கிறார்கள். குருவுக்கு அணிவிக்கவேண்டிய மஞ்சள் துணியை தட்சிணா மூர்த்திக்கு அணிவிக்கிறார்கள். கடலை சாதம் போன்ற குருகிரக நைவேத்திய பொருள்களை தெட்சிணாமூர்த்திக்கு நைவேத்தியம் செய்கிறார்கள்.

குருப்பெயர்ச்சியன்று தட்சிணாமூர்த்தி சன்னதியில் ஹோமங்கள் அபிஷேக ஆராதனைகள், சாந்தி பரிகாரங்களை செய்கிறார்கள். இவையெல்லாம் தவறு என்று ஆன்மீக பெரியவர்கள் சொல்கிறார்கள்.

என்றாலும் தட்சிணாமூர்த்தியும் குருவும் ஒன்றே என்று பலரும் வாதிடுகிறார்கள். குரு பகவான் என்பவர் தேவகுரு மட்டும் தானாம். ஆனால் தட்சிணாமூர்த்தி என்பவர் குருவுக்கும் குருவான பெரிய குருவாம். அதனால் குருவுக்குச் செய்வதை இவருக்குச் செய்வதில் தவறில்லை என்று வாதிடுகிறார்கள். சிலர் குருவுக்கு அதிதேவதை தெட்சிணாமூர்த்தி என்று சொல்கிறார்கள். அதுவும் தவறு. குருவுக்கு அதிதேவதை இந்திரன். பிரத்யதி தேவதையோ பிரம்மதேவன். இதற்கான ஆதாரங்கள் பல தொன்னூல்களில் உள்ளன. எனவே தட்சிணாமூர்த்தியும் குரு பகவானும் ஒன்றே என நம்மை நாமே குழப்பிக் கொள்ளக்கூடாது.

குருவின் நட்சத்திரகங்கள்.

புனர்பூசம், விசாகம், பூரட்டாதி ஆகிய நட்சத்திரங்களில் பிறந்தவர்களுக்கு, பிறப்பில் குரு திசை நடக்கும்.

## அனைத்திற்கும் குருவே காரணம்:

உலகம் முழுவதும் உள்ள பணம், பொன் விஷயங்களுக்கு குருவே அதிபதி. எனவே பொருளாதாரம் உயரவேண்டுமானால் குருவை வழிபடவேண்டும். அதேபோன்று திருமணம் நடைபெற வேண்டுமானாலும், குழந்தை பாக்கியம் பெற வேண்டுமானாலும் குரு பார்வை மிகுந்த அவசியமாகும்.

கடவுள்களுக்கே குரு பார்வை அவசியம் என்பதை உணர்த்தும் ஒரு சிறு நிகழ்வு புராணத்தில் கூறப்பட்டுள்ளது.

ஒருமுறை பார்வதி தேவியானவர் பூவுலகில் பிறந்து, சிவபெருமானை திருமணம் செய்துகொள்ள கடுந்தவம் புரிந்தார். நாட்கள் கடந்துகொண்டே இருந்தன. ஆனால் திருமணம் கைகூடி வரவில்லை. தேவர்கள் சிவபெருமானிடம் சென்று தேவியை மணந்து கொள்ளவேண்டுமென்று முறையிட்டனர். அப்போது சிவன், “தேவியைத் திருமணம் செய்துகொள்ள நானும் தயாராகவே இருக்கிறேன். ஆனால் என்ன செய்வது? தேவிக்கு இன்னும் குரு பலம் வரவில்லையே’ என்றார். உலக அன்னையான தேவிக்கே குரு பலம் இருந்தால்தான் திருமணம் நடைபெறும் எனும்போது சாமான்யர்களான நம் நிலை என்ன? எனவே திருமணம் தடைப்படுபவர்கள் அவர் ஆணாக இருந்தாலும், பெண்ணாக இருந்தாலும் குருவின் பார்வை அவசியமாகும்.

திருமணம் மட்டுமின்றி குழந்தை பாக்கியத்திற்கும் குரு பார்வை அவசியம், பொருள் சேர்ந்துவிட்டது. திருமணமும் ஆகிவிட்டது. குழந்தை வரம் கிடைக்கவில்லை. அப்போதும் குரு பகவானையே வழிபடவேண்டும். ஏனென் றால் குரு பகவான் புத்திரகாரகன் என்று அழைக்கப்படுகின்றார். அவர் அருள் இருந்தால்தான் குழந்தை பிறக்கும்.

நவீன விஞ்ஞான ஆய்வுகளும் இதையே கூறுகின்றன. வியாழகிரகத்திலிருந்து வரும் மஞ்சள் நிறமான மீத்தேன் கதிர்கள்தான் உயிரினங்கள் உண்டாகக் காரணமென்று அறிவியல் ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

## வித்யாகாரகன் குரு பகவான்

குருவருளால் பொருள், திருமணம், குழந்தைச் செல்வம் என எல்லாம் பெற்று விட்டீர்கள். அந்தக் குழந்தை நல்லபடியாகப் படித்து முன்னேற வேண்டும் அல்லவா? அதற்கும் குரு பகவான்தான் அருளவேண்டும். கல்வியில் முன்னேற்றம், வேத வேதாந்த சாஸ்திர அறிவு, நல்ல புத்தி, ஞாபக சக்தி அனைத்தையும் வழங்குபவர் குரு பகவான்தான். அப்படி நல்லபடியாகப் படித்துத் தேறிய குழந்தைகளுக்கு உரிய பதவியை வழங்குபவரும் குரு பகவான் தான். அவர் அருளால்தான் உயர் பதவிகள் கிடைக்கும்

## குரு பார்க்க கோடி நன்மை

நவகிரகங்களில் முழுமையான சுப கிரகம் குரு பகவான் ஒருவரே. சந்திரன் சுபரானாலும் இவர் வளர்பிறையில் மட்டுமே சுபராகக் கருதப்படுவார். புதன் சுபகிரகங்களோடு சேரும்போது மட்டுமே சுபர். அசுப கிரகங்களோடு சேரும்போது பாபத் தன்மை அடைந்துவிடுவார். சுக்கிரன் சுப கிரகமானாலும் அவர் அசுர இனத்தில் பிறந்ததால் அவரை முழு சுபராக ஏற்பதில்லை. எனவே, தேவகுருவான குரு பகவானே முழுச்சுபராக கருதப்படுகின்றார்.

சூரியன், செவ்வாய், சனி, ராகு, கேது ஆகிய ஐந்து கிரகங்களையும் முழு பாப கிரகங்களாக ஜோதிட சாஸ்திரம் நிர்ணயித்துள்ளது. இந்த ஐந்து கிரகங்களினால் வரும் தோஷங்களைக்

கட்டுப்படுத்துகிற சக்தி முழு சுபகிரகமான குரு பகவானுக்கு உண்டு. குருவின் 5, 7, 9ஆம் பார்வைகள் சிறப்பாகச் சொல்லப்படுகிறது. எனவேதான் “குரு பார்க்க கோடி தோஷம் விலகும்‘, “குரு பார்க்க கோடி நன்மை’ என்று பழமொழிகள் உருவாகின.

**வியாழகிரகத்திலிருந்து வரும் மஞ்சள் நிறமான மீத்தேன் கதிர்கள்தான் உயிரினங்கள் உண்டாகக் காரணமென்று அறிவியல் ஆய்வுகள் தெரிவிக்கின்றன**

ஒருவரின் சுய ஜாதகத்திலும் சரி, கோசாரப்படியும் சரி, குரு தன் பார்வையால் வழங்கக்கூடிய பலன்கள்:

1ம் இடத்தை, அதாவது ஜன்ம ராசியைப் பார்த்தால், பேரும் புகழும் உண்டாகும். அந்தஸ்து, மதிப்பு உயரும்.

2ம் இடத்தை, குடும்ப ஸ்தானத்தைப் பார்த்தால், பிரிந்த குடும்பம் ஒன்று சேரும்.

3ம் இடத்தை, தைரிய ஸ்தானத்தைப் பார்த்தால், எதிரிகளின் தொல்லை விலகும்.

4ம் இடத்தை, சுக ஸ்தானத்தைப் பார்க்கும் போது வீடு மனை வாங்கும் யோகமும், வாகன பிராப்தியும் ஏற்படும்.

5ம் இடத்தை, பூர்வபுண்ணிய ஸ்தானத்தைப் பார்க்கும்போது, குழந்தை பாக்கியம் இல்லாமல் இருப்பவர்களுக்குக் குருவருளால் குழந்தை பாக்கியம் கிட்டும். பூர்வீகச் சொத்து வகையில் இருந்துவந்த சிக்கல்கள் நீங்கி, அந்தச் சொத்து கைக்கு வரும்.

6ம் இடத்தில், ருண ரோக ஸ்தானத்தில் குருவின் பார்வை படும்போது, நீண்டகாலமாக உடல்நலம் இல்லாமல் இருந்தவர்கள் பூரண நலம் பெறுவர்.

7ம் இடத்தை, களத்திர ஸ்தானத்தை குரு பார்க்க, பெற்றோர் ஆசிகளுடன் நல்ல மண வாழ்க்கை அமையும்.

8ம் இடத்தை, ஆயுள் ஸ்தானத்தைப் பார்க்கும் போது, மரண பயம் நீங்கும்; விபத்துகள் ஏற்பட்டாலும் தப்பித்துக் கொள்ளலாம்.

9ம் இடத்தை, பாக்கிய ஸ்தானத்தைப் பார்க்கும்போது, வெளிநாடு சென்று உத்தியோகம் பார்க்கும் வாய்ப்பு உண்டாகும்.

10ம் இடத்தை, ஜீவன ஸ்தானத்தைப் பார்க்கும் போது, பதவியில் உயர்வும் நல்ல மாற்றமும் ஏற்படும். பெற்றோரின் உடல்நிலை சீராகும்.

11ம் இடத்தை, லாப ஸ்தானத்தைப் பார்க்கும் போது, எதிர்பாராத பொருள்வரவு போன்ற சுப பலன்கள் ஏற்படும்.

12ம் இடத்தில், சயன மோட்ச ஸ்தானத்தில் குருவின் பார்வை பதியும்போது, ஆன்மிகத்தில் நாட்டம் ஏற்படும்; தெய்வ தரிசனமும் மகான்களின் அருளாசிகளும் பெறக்கூடிய வாய்ப்பு கிடைக்கும்.

## பயம் தேவையில்லை

தற்சமயம் ஆன்மீக விஷயங்களில் பக்தியைவிட பயம் தான் அதிகம் உள்ளது.

ராகுகேது பெயர்ச்சி, சனிப்பெயர்ச்சி, குரு பெயர்ச்சி என்று வரும்போது மக்கள் மிகுந்த அச்சத்தில் உறைந்து போய்விடுகின்றனர்.

குரு என்றும் நலம்மட்டுமே அருள்பவர். அவர் ஒரு ராசிவிட்டு மற்றொரு ராசிக்கு பெயரும் போது கூட தீய பலன்கள் எதுவும் தரமாட்டார். நற்பலன்கள் குறையலாமே தவிர நிச்சயமாக தீய பலன்கள் ஏற்படாது.

தொடர் ஆன்மீக ஈடுபாடும், தெய்வ சிந்தனையும், மற்றவர்களுக்கு உதவும் மனப்பான்மையும், நல்லொழுக்கம் போன்றவை களையும் கடைபிடிக்கும் எந்த மனிதருக்கு எந்த கிரகமும் எந்த கெடுதலையும் செய்யாது.

இறை பக்தியின் பலன், கிரகங்களை சாந்தப் படுத்தும் என்பதை மனதில் வைத்தால் போதும் நடப்பது ஈசன் அருளால் நடைபெறுகிறது என்பதை மட்டும் மனதில் நிறுத்தினால் போதும் எந்தவதி பயமும் கொள்ளத் தேவையில்லை.


மாதம் இரண்டு முறை இலவசமாக வெளிவரும் “ஆன்மிகமலர் மெயில் புத்தகம்” பெற உங்கள் இமெயில் முகவரியை கீழ்காணும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்

what-up no: 7299992699

mail: aanmeegamalar@gmail.com







உலக வரலாற்றில் முதன் முறையாக




எந்தவித கட்டணமுமின்றி இலவசமாக பெற

உங்கள் இ-மெயில் முகவரியை

கீழ்காணும் வாட்சப் எண் அல்லது இமெயில் முகவரிக்கு அனுப்பிவையுங்கள்

Whatsup no.7299992699

aanmeegamalar@gmail.com

முடிந்த அளவு Share செய்து எங்கள் பணிக்கு உதவுங்கள்

விக்னங்களைத் தீர்ப்பதில் முதலில் உள்ளவர் விக்னேஷ்வரன், இதன் காரண மாகத்தான் பல்வேறு நாடுகளிலில் உள்ள மக்களும் விநாகயகரை பல்வேறு வடிவங்களில் கொண்டாடி மகிழ்கின்றனர்.

பிள்ளையாரை வணங்கி செயலைத் தொடங்கினால் தன்னம்பிக்கையுடன் வெற்றிகரமாக எதிர்பார்த்த பலனுடன் செவ்வனே செய்து முடிக்கலாம் என்பது நம்பிக்கை.

# பல்வேறு யுகங்களில் கணேசனின் பெயர்கள்

## ஒவ்வொரு பெயருக்கு ஒவ்வொரு பலன்கள்



ஆதியில் காணபத்தியம் என்ற ஒரு மதம் விநாயகரை மட்டுமே துதித்து வழிபடும் ஒரு மதமாகவே இருந்துள்ளது. இந்து மதத்தினுள் உள்வாங்கப்பட்ட சமயமான காணாபத்தியம் எனும் பிரிவு விநாயகரை மையப்படுத்திய சமயம். என்றும் கூறுவார்கள்.

கால நிலை மாற்றம் போன்றவற்றால் தனித் தனியாக பிரிந்திருந்த சைவம், வைணவம், சாக்தம், காணபத்தியம் போன்ற இன்னும் பல் வேறு மதங்கள் ஒன்றினைந்து இந்து மதத்திற்குள் ஒன்றாக ஐக்கியமாகின.

விநாயகர் ஒவ்வொரு கால கட்டத்திலும் பல் வேறு வடிவங்களில் திகழ்கிறார் என்று 'கணேச புராணம்', கூறியுள்ளது. கிருத, திரேதா, துவாபர, கலி ஆகிய நான்கு யுகங்களிலும் நான்கு அவதாரங்களாக அவதரிப்பதாகக் கூறுகின்றது.

அதன்படி, கிருதாயுகத்தில் மகாகடர் என்றும், திரோதா யுகத்தில் மயூரேசர் என்றும், துவாபர யுகத்தில் கஜானனன் என்றும், கலியுகத்தில் கணேசன், விநாயகர், பிள்ளையார் போன்ற திருநாமங்களுடன் விளங்குவதாகவும் கூறப் பட்டுள்ளது.

கணபதி:

கணங்களிற்கு அதிபதி. பூதகணங்களிற்கெல்லாம் அதிபதியாதலினால் கணபதி என்றழைக்கப்படுகின்றார்.

ஆனைமுகன்:

ஆனை அதாவது யானை முகத்தை உடையவ ராதலால் ஆனைமுகன் என்றழைக்கப்படுகின்றார்.

கஜமுகன்:

கஜம் என்றாலும் யானையைக் குறிக்கும். யானைமுகத்தை உடையவராதலினால் கஜமுகன் என்றழைக்கப்படுகின்றார்.

விக்னேஸ்வரன்:

விக்கினங்களைத் தீர்க்கும் ஈஸ்வரன் அதாவது பிரச்சினைகளைத் தீர்க்கும் கடவுள்

ஒவ்வொரு பெயருக்கும் ஒவ்வொரு பலன்:

இது தவிர பல்வேறு திருநாமங்கள் விநாயகப் பெருமானுகளு உள்ளதாகவும், ஒவ்வொரு நாமத்திற்கும் ஒவ்வொரு பலன் உள்ளதாகவும் புராணங்கள் கூறுகின்றது. அதில் மிகவும் முக்கியமாக 51 திருநாமங்கள் விளங்குகின்றன.

51 நாமங்களும் பலன்களும்:

1. ஏகாக்ஷர கணபதி: பரிபூரண சித்தி.
2. மகா.கணபதி: கணபதி அருள் கிடைக்கும்
3. த்ரைலோக்ய. மோஹன கர கணபதி: ஸர்வ ரக்ஷாப்ரதம்.
4. லக்ஷ்மி கணபதி: தன அபிவிருத்தி
5. ருணஹரள கணபதி: கடன் நிவர்த்தி.
6. மகா வித்யா கணபதி: தேவ அனுக்ரகம்.
7. ஹரித்ரா கணபதி: உலக வசியம்.
8. வக்ரதுண்ட கணபதி: அதிர்ஷ்ட லாபம்.
9. நிதி கணபதி: நிதி ப்ராப்தி.
10. புஷ்ப கணபதி: தானிய விருத்தி.
11. பால கணபதி: மகிழ்ச்சி, மன நிறைவு.
12. சக்தி கணபதி: சர்வ காரியசித்தி.
13. சர்வ சக்தி கணபதி: சர்வ ரக்ஷாப்ரதம்.
14. க்ஷிப்ர ப்ரஸாத கணபதி: துரித பலன்.
15. குக்ஷி கணபதி: ரோக நிவர்த்தி.
16. ஸ்ரீ சந்தான லட்சுமி கணபதி: மக்கட்செல்வம்.
17. ஸ்ரீ ஸ்வர்ண கணபதி: ஸ்வர்ண பிராப்தி.
18. ஹேரம்ப கணபதி: மனச்சாந்தி.
19. விஜய கணபதி: வெற்றி.
20. அர்க கணபதி: தோஷ நிவர்த்தி.
21. ச்லேதார்க்க கணபதி: மாலா மந்திரம்.
22. உச்சிஷ்ட கணபதி: திரிகால தரிசனம்.
23. போக கணபதி: சகலலோக ப்ராப்தி.
24. விரிவிரி கணபதி: விசால புத்தி.
25. வீரகணபதி தைரியம்.
26. சங்கடஹர கணபதி: சங்கட நிவர்த்தி.
27. கணேசாங்க நிவாரணி: லட்சுமி மந்திர சித்தி.
28. விக்னராஜ கணபதி: ராஜயோகம்.
29. குமார கணபதி: மாலா மந்திரம்.
30. ராஜ கணபதி: மாலா மந்திரம்.டப31. ப்ரயோக கணபதி: மாலா மந்திரம்.
32. தருண கணபதி: தியானயோக ப்ராப்தி.
33. துர்கா கணபதி: துக்க நிவாரணம்.
34. யோக கணபதி: தியானம்.
35. நிருத்த கணபதி: கலா பிவிருத்தி.
36. ஆபத்சகாய கணபதி: ஆபத்துகள் நீங்குதல்.
37. புத்தி கணபதி: வித்யா ப்ராப்தி.
38. நவநீத கணபதி: மனோவசியம்.
39. மோதக கணபதி: சம்பூர்ண பலன்.
40. மேதா கணபதி: மேதா பிவிருத்தி.
41. மோஹன கணபதி: ரக்ஷாப்ரதம்.
42. குரு கணபதி: குருவருள்.
43. வாமன கணபதி: விஷ்ணு பக்தி.
44. சிவாவதார கணபதி: சிவபக்தி.
45. துர்வாக கணபதி: தாப நிவர்த்தி.
46. ரக்த கணபதி: வசிய விருத்தி.
47. அபிஷ்டவாத கணபதி: நினைத்ததை அடைதல்.
48. ப்ரம்மண கணபதி: ப்ரம்ம ஞானம்.
50. மகா கணபதி: ப்ரணவமூலம்.
51. வித்யா கணபதி: ஸ்ரீ வித்தை

www.aanmeegamalar.com

# புத்தம் புதிய செய்திகளுடன் ஆன்மீக தேடலுக்கு அற்புதமான வழிகாட்டி

**www.aanmeegamalar.com**

ஆன்மிகமலர் மெயில் புத்தகத்தின்
முந்தைய இதழ்களை
விரைவில் நமது
**www.aanmeegamalar.com**
இணையதளத்தில் படித்து மகிழலாம்.





வளர்ந்து வரும் டிஜிட்டல் யுகத்தில்
இந்து சமயக் கருத்துக்களையும்,
பழமையான ஆன்மீக புத்தகங்களையும்

# ஆன்மிகமலர் டிரஸ்ட்

**Tamilnadu Government Redg.304/2016**

முழு முயற்சியுடன் டிஜிட்டல் மயமாக்கி வருகிறது.
அழகிய வண்ணங்களுடன்,
கண்ணைக்கவரும் விதத்தில்
புத்தம் புதிய பொலிவுடன்,
அனைத்துவித டிஜிட்டல் கருவிகளின் மூலமும்
சிறுவர் முதல் வயதானவர் வரை அனைவரும்
தெளிவாக படிக்கும்விதத்தில் தயாரித்து வருகிறோம்.

எங்களின் சேவைக்கு உங்கள் உதவி அவசியம்
உங்களால் முடிந்த உதவிகளை செய்யலாம்.

**AANMEEGA MALAR TRUST**
ACCOUNT NO. 310601011001269
IFSC CODE:VIJB0003106
MICR CODE: 600029043
VIJAYA BANK (KODAMBAKKAM BRANCH)

நெ.16/18, பாரதீஸ்வரர் காலனி, 4வது தெரு, கோடம்பாக்கம், சென்னை 600024.
மேலும் தொடர்பு கொள்ளவும்
7299992699 / 8825844033

நிரந்தரக் காதல்

# இறைவனுடனான காதல் சாசுவதமானது

17 பாகம்

மனித வாழ்வு மேம்படுவதற்காக

## பரமஹம்ஸ யோகானந்தர் அருளிய வழிமுறைகள்

பரமஹம்ஸர் கூறுகிறார்: “நான் உங்களுக்கு அளித்துக் கொண்டிருப்பது வெறும் சமயச்சொற் பொழிவுகள் அல்ல. ஆனால் உங்களை விடுவிக்கக்கூடிய உண்மை ஆகும்.

நான் விரும்புவது யோகதா சத்சங்கப் பாடங்களை நீங்கள் பின்பற்றவேண்டும் என்பது தான். அவை இந்த யுகத்தின் மகத்தான செய்திகளை அடக்கியிருக்கின்றன. மேலும், அமைதி குகையில் இடைவிடாது பிரார்த்தனை செய்யுங்கள். தியானம் செய்யாமல் ஒருபோதும் உறங்கச் செல்லாதீர்கள். உறக்கத்தை எந்த நேரமும் நீங்கள் பெறமுடியும். ஆனால் இறைவனை அல்ல.

நீங்கள் தனிமையில் இருக்கும்போதெல்லாம் கடமைகளுக்கிடையே கிடைக்கும் சிறிது நேர இடைவெளிகளில் அமைதியாக அமர்ந்து அவனிடம் பிரார்த்தனை செய்யுங்கள். “உன்னை வெளிப்படுத்து; நீ இங்கேயே இருக்கிறாய்; நீ என்னை ஏமாற்ற முடியாது; நீ எனக்குள்ளும் என்னைச் சுற்றிலும் இருக்கின்றாய். நான் உன்னை மட்டுமே நேசிக்கிறேன்.” அவன் உங்களிடம் வருவான். மேகங்களில், ஒளியில், முகங்களில் அனைத்து வகையான வழிகளில், இறைவன் தனது பக்தர்களுடன் உள்ளுணர்வின் வாயிலாக, நண்பர்களின் வாயிலாக, ஒளி எழுத்தின் வாயிலாக மற்றும் உள்ளுக்குள் கேட்கப்படுகின்ற ஒரு பேரொலியின் வாயிலாகப் பேசுகிறான்.”

பரமஹம்ஸர் கூறுகிறார்: “இறைவன் என்றென்றும் உங்களிடம் இரகசிய குரலில் கூறுகிறான்: “நான் பேரன்பு, ஆனால் அன்பை அளித்தலையும் அன்பின் பரிசையும் அனுபவிப்பதற்காக, நான் என்னையே அன்பு, அன்பன் மற்றும் அன்புக்குரியன் என்று மூன் றாகப் பிரித்துக்கொண்டேன். எனது அன்பு அழகானது. தூய்மையானது, நிரந்தரமாக ஆனந்தமானது. நான் அதனை அநேக வழிகளில் அநேக வடிவங்களின் வாயிலாக சுவைக்கின்றேன்.”

மேலும் அவர் கூறுகிறார்: “உங்களாது உணர்வுநிலையின் வாயிலில்இறைவன் நிற்கின்றான். இவை நான் பெற்றுக்கொண்டிருக்கிற அனுபவங்களில் சில. அவை உண்மையானவை. மேலும், இறைவன் உங்களுடன் இருக்கிறான் என்பதைநீங்கள் அறியும்பொழுது அவை பெருகத் துவங்குகின்றன. அத்தகைய அனுபவங்களை வெறுமனே உங்களை கவர்வதற்காக மட்டுமே அவன் அளிப்பதில்லை. அவனது இருப்பின் சான்றைவிட குறைவான எதையும் நீங்கள் நிராகரித்து அவனை நம்பவைத்தால் மட்டுமே அளிக்கிறான். என்னைப்போன்று நீங்களும் அவனை நேசித்தால் உங்களுக்காவும் அவன் அற்புதமான விஷயங்களை புரிவான். அவன் அனைவரையும் நேசிக்கிறான். அவன் உங்களது உணர்வு நிலையின் வாயிலில் நிற்கிறான். ஆனால், நீங்கள் அவனை உள்ளே அனுமதிப்பதில்லை. நாம் அவனை நாடிக்கொண்டிருப்பதைவிட மிகவும் அதிகமாக அவன் நம்மை நாடிக்கொண்டிருக்கிறான் என்பதை நான் அதிக அளவில் காண்கிறேன். அவன் நம்மிடம் அக்கறைகொள்ளாமல் இல்லை. நாம் தான் அவனிடத்தில் அக்கறையின்றி இருக்கிறோம். எனவே பெரும் மனதீவிரத்துடன் உளமார அவனை நீங்கள் நாடவேண்டும். அவன் உங்களுக்குப் பதிலளிக்கவில்லை என நீங்கள் எண்ணலாம். அப்பொழுதுதான் பெரும்பாலான மனிதர்கள் ஊக்கமிழந்து நிறுத்தி விடுகின்றனர். உங்களை அவ்வளவு தொலைவு தொடர்ந்து செல்ல வைத்திருப்பவன் அவனே. நீங்கள் கைவிடக்கூடாது. அவன்மேல் உங்களுக்கு சந்தேகம் எழும்பொழுதுகூறுங்கள், “எனது கைகளை எவ்வாறு அசைத்துக்கொண்டிருக்கிறேன்? எனது செரிமானம் எவ்வாறு நடைபெறுகிறது? எனது சுவாசம் எவ்வாறு ஓடுகிறது? அவன் இருக்கத்தான் வேண்டும். அவன் இருக்கின்றான்.” இவ்வாறு நீங்கள் அந்தப்பேராற்றலின் மீது சார்ந்திருக்கும்போது அந்தப் பேராற்றல் ஏன் திரும்பக்கூடாது? அனைத்திற்கும் மேலாக நீங்கள் அவனை நேசிப்பதை வெளிக்காட்டுவதில் ஒவ்வொரு நாளும் உறுதியாக இருக்கும்பொழுது, பிறகு நீங்கள் என்ன வேண்டினாலும் அது நடக்கும்.

மேலும் அவர் கூறுகிறார்: “இறைவன் மிகவும் நேசிக்கத்தக்கவன். உங்களது பிரச்சனைகளுக்கு இறைவன் பதிலளிப்பதில்லை என்று ஒருபோதும் எண்ணாதீர்கள். நீங்கள் அவனிடத்தில் இரகசிய மென்குரலில் பேசியிருக்கின்ற ஒவ்வொரு வார்த்தையையும் அவன் தனது இதயத்தில் எழுதி வைத்திருப்பான். ஒருநாள் அவன் உங்களுக்கு பதிலளிப்பான். நீங்கள் அவனையும் மறுமொழி அளிக்கும் அநேக வழிகளையும் நீங்கள் கவனித்துக்கொண்டேயிருந்தால் உண்மையில் எல்லா நேரங்களிலும் அவன் உங்களுக்குப் பதிலளிப்பதை நீங்கள் அறிவீர்கள். நீங்கள் மிகவும் ஆர்வத்துடன் இருந்தால் மகத்தான வழிகளில் அவன் பதிலளிப்பான். விடாமுயற்சி மூலமே அவனை வரவழைக்கமுடியும். நீங்கள் விரும்பும் அனைத்தும் அவனிடமுள்ளன. நீங்கள் இறைவனைத் தவிர வேறு எதனையாவது நாடுவது மிகத்தவறாகும்.”



இறைவன் நம்முடன் எப்பொழுதும் இருக்கிறார். அது என்னவெனில், முப்பத்தி மூன்று வருடங்களுக்கு முன்னர் என் அன்னையை காப்பாற்றும் பொருட்டு அன்னை மூலமாக எனக்கு உணர்த்திய ஒரு சிறு நிகழ்வினை கூற விழைகின்றேன்.

கடலூரிலுள்ள செம்மண்டலம் என்ற இடத்தில் நாங்கள் வீடுகட்டி 3.12.1984 அன்று புதுமனை புகுவிழாவிற்கு தேதி குறிக்கப்பட்டது. கன்னியாகுமரி மாவட்டத்தில் திருவட்டாறு என்ற ஊருக்கு அருகாமையிலுள்ள ஒரு கிராமத்தில் நான் பிறந்து வளர்ந்தேன். என்னுடன் பிறந்து தற்போது உயிருடன் இருப்பவர்கள் 3 சகோதரிகளும் ஒரு சகோதரனும் மட்டும், இவர்கள் நான்குபேர்களும் அப்பொழுது என்னுடன் கடலூரில் இருந்தனர். என் தந்தை இந்த புதுமனை புகுவிழாவிற்கு வர இயலாத சூழ்நிலையில் இருந்ததனால் என் தாயார் மட்டும் வருவதாக ஒரு வாரத்திற்கு முன்னர் கடிதம் எழுதியிருந்தார். அப்பொழுது கடிதப் போக்குவரத்து மட்டும்தான் உள்ளது. இன்றைக்குள்ளதுபோல் அன்றைக்கு தொலைதொடர்பு வசதிகள் ஏதுமில்லை. கடிதம் எழுதி போஸ்ட் செய்தால் அது கிடைக்கப்பெறுவதற்கு மூன்று அல்லது நான்கு நாட்கள் ஆகிவிடும். 1.12.1984 அன்று மாலை 5.30 மணிக்கு நாகர்கோவிலிலிருந்து நாகர்கோவில்பாண்டிச்சேரி திருவள்ளுவர் பேருந்தில் புறப்படுவதாகக் கடிதத்தில் எழுதியிருந்தது. அவ்வாறு புறப்பட்டால் மறுநாள் காலையில் 8.00 மணியளவில் கடலூர் வந்து சேரும். எங்கள் தாயாரை ஊரிலுள்ள ஒருவர் அழைத்து வந்து பேருந்தில் ஏற்றிவிட்டு அவர் திரும்பிச் சென்றுவிடுவார் என்றும் தாயார் மட்டும் தனியாக பேருந்தில் புறப்பட்டு வருவார் என்றும்தான் கடிதத்தில்

மாதம் இரண்டு முறை
இலவசமாக வெளிவரும்
"ஆன்மிகமலர் மெயில் புத்தகம்"
பெற உங்கள் இமெயில் முகவரியை
கீழ்காணும் முகவரிக்கு அனுப்பி
வையுங்கள்
whats-app no: 7299992699
aanmeegamalar@gmail.com

எழுதியிருந்தது. கடிதத்தை மட்டும்தான் நம்ப முடியுமே தவிர வேறு எந்த நம்பத்தகுந்த தகவலும் இல்லை. அதனால் நானும் என் கணவரும் 2.12.1984 அன்று காலையில் 7.00 மணிக்கு என் தாயாரை அழைத்துவரச் சென்றோம்.

எமது தாயார் எப்படிப்பட்டவர் என்று விளக்க வேண்டிய கட்டாயம் உள்ளது. அவர்களுக்கு இளவயதிலிருந்தே இரண்டு காதுகளும் கேட்காது; தமிழ் ஓர் எழுத்து கூட தெரியாது; அவர்களது தாய்மொழி மலையாளம். கல்வி கற்றதும் மலையாளத்தில். அவருக்கு தமிழ் பேசப்படிக்கவும் எழுதவும் தெரியாது. பிறர் பேசுவதைக் கேட்டு புரிந்துகொள்ளவும் முடியாது. அம்மாவிடத்தில் பேசும்போது சைகை காட்டித்தான் பேசு வோம். அப்பொழுதுதான் அவர்களால் புரிந்து கொள்ளமுடியும். வெளியுலக அனுபவம் அவர்களுக்கு இல்லை.

தனித்து எங்கேயும் சென்றதில்லை. தனித்து தொலைதூரம் பயணம் செய்த முதன் முறையான பயணம் கடலூர் பயணம்தான். அவர் ஒரு மிகுந்த ஸ்ரீ கிருஷ்ணபக்தை. யாருக்கும் ஒரு தொல்லையும் கொடுக்காத ஓர் அப்பாவி. அப்படிப்பட்ட என் தாயார் 'நாகர்கோவில் பாண்டிச்சேரி' திருவள்ளுவர் பேருந்தில் வருகிறார். அவர் அந்தப் பேருந்தில் வருகிறார் என்ற முழு நம்பிக்கையுடன் நாங்கள் இருவரும் காலையில் திருவள்ளுவர் பேருந்து நிலையத்திற்குச் சென்றோம். எப்பொழுதும் அங்கேதான் வண்டி வந்து நிற்கும். நாகர்கோவில் வண்டி வந்ததா? என்று அலுவலகத்தில் விசாரித்ததில் இன்னும் வரவில்லை, 7.30 மணிக்கு வரும் என்றனர். சரி, வண்டி வரும்வரை 'இங்கே நிற்கலாம்' என்றெண்ணி அங்கேயே நின்றோம். சுமார் 7.45 மணிக்கு வண்டி வந்தது, ஆனால் எங்களுடைய போதாத காலம் அந்த பேருந்து திருவள்ளுவர் பேருந்துநிலையத்திற்கு வராமல் நேராக கடலூர் பஸ் நிலையத்திற்கு மிக விரைவில் சென்றுகொண்டிருந்தது. ஒருவேளை அம்மா வரவில்லையோ என்றும் அவர்களை பார்க்கவும் முடியவில்லையே என்றெண்ணி பயத்துடன் இருந்தோம். "இறைவா இது என்ன சோதனை, வண்டி ஏன் இங்கே நிறுத்தாமல் கடலூர் பஸ்நிலையத்திற்குச் சென்றுகொண்டிருக்கிறது. வண்டி இங்கே நிறுத்தாமல் செல்வதன் காரணம் ஒருவேளை அம்மா அந்தப் பேருந்தில் வரவில்லையா?" என்று திருவள்ளுவர் பஸ்நிலையத்தில் நின்றுகொண்டு நாங்கள் பேசினோம். என் அன்னையால் அந்தப்பேருந்தில் வரவில்லை என்று உறுதி செய்து நாங்கள் 'இனி நாம் வீடு திரும்பலாம்' என்று எண்ணினோம். ஆனால் இவ்வாறு பேசிக்கொண்டிருக்கின்ற நேரத்தில் திடீரென பேருந்தின் ஜன்னல் வழியாக ஒரு கை அது என் அம்மாவின் வலதுகை வெளியே நீட்டி அசைத்தவாறு இருந்ததைக் கண்ட நான் என் கணவரிடம் ''அம்மா இந்தப் பேருந்தில் இருக்கிறார், அவர் தன் கையை தொங்கப்போட்டு ஆட்டிய வண்ணம் அசைத்துக் காண்பித்தார். நான் அதைப் பார்த்தேன்" என்று மிகுந்த ஆதங்கத்துடன் கூறினேன். இதெல்லாம் ஒரு விநாடியில் நடந்தது. நாங்கள் நின்றுகொண்டிருந்த இடத்திற்கும் கடலூர் பஸ்நிலையத்திற்கும் இடையிலான தூரம் சுமார் 4 ஃபர்லாங் இருக்கும்.

என் தாயார் அந்தப் பேருந்தில் இருக்கிறார் என்று தெரிந்ததும் நாங்கள் இருவரும் அங்கிருந்து ஓட ஆரம்பித்தோம். என் கணவர் முன்னாலேயும் அவர் பின்னாலே நானும் ஓடினோம். அப்பொழுது என் உடல்நிலை மிகவும் சோர்வுற்றிருந்தது. அதனால் என்னால் வேகமாக ஓடமுடியவில்லை. இருப்பினும் மூச்சைப் பிடித்துக்கொண்டு கீழே விழாமல் ஓடினேன். எனது வாழ்க்கையில் இது ஒரு ஒட்டப்பந்தயமாக இருந்தது என்றுதான் கூறவேண்டும். நாங்கள் கடலூர் பஸ்நிலையத்தை அடைந்தபோது, பேருந்திலிருந்து என் தாயார் கீழே இறங்கி நிற்பதை என் கணவர் பார்த்தார். பின்னர் நாங்கள் அன்னையை வீட்டிற்கு அழைத்துவந்தோம். வீட்டிற்குச் வந்தபின்னர் நான் என் தாயாரிடம் "நீங்கள் எங்களைப் பார்த்தீர்களா?" என்று கேட்டேன். "இல்லை, நான் உங்களைப் பார்க்கவில்லை" என்று பதிலளித்தார்.

"நீங்கள் உங்கள் கையை பேருந்தின் ஜன்னல் வழியாக வெளியில் நீட்டியவாறு அசைத்தீர்களா? என்று கேட்டேன். அதை நான் கண்டேனே!" என்று நான் அவர்களிடம் கூறினேன். "இல்லையே! நான் என் கையை வெளியில் நீட்டவும் இல்லை. அசைக்கவும் இல்லை. நான் உங்களைப் பார்க்கவுமில்லை. நீங்கள் எங்கே இருப்பீர்கள் என்றும் எனக்குத் தெரியாது. கடலூர் என்ற இடம் எங்கே உள்ளது என்றும் எனக்கு தெரியாது; வண்டி கடலூர் வந்ததையும் நான் அறியவில்லை. நான் வண்டிக்குள் தூங்கிக்கொண்டிருந்தேன். என்னை பக்கத்திலிருந்தவர்கள் எழுப்பினர். அப்பொழுது, 'இதுதான் கடலூர்' என்று நான் நினைத்தேன். வெளியில் இறங்கியதும் உங்கள் இருவரையும் நான் பார்த்தேன்" என்று அன்னை பதிலளித்தார்.

அவர் கூறியதைக் கேட்டதும் என் மெய் முழுவதும் சிலிர்த்தது. அப்பொழுது, ''நான் கண்ட கைகள் யாருடையது? என்பதை என்னால் எண்ணிப்பார்க்கவே முடியவில்லை. நான் மனதாரப் பிரார்த்தித்தேன், "ஓ கிருஷ்ணா! இது உன் வேலைதானா, அன்னைக்குப் பதிலாக நீதான் கையை அசைத்தாயா? அன்னையின் அதே கை ! அவர் தூங்கிக்கொண்டிருந்ததாகக் கூறுகிறார். அவர் தன் கையை அசைக்கவில்லையாமே ! நீ செய்தது எவ்வளாவு பெரிய உபகாரம். மனிதனால் செய்யமுடியாதது உன்னால் மட்டும்தான் செய்யமுடியும் என்பதை நீ நிரூபித்து விட்டாய். நீ அவ்வாறு கையை அசைக்கவில்லை என்றால் விபரீதமல்லவா விளைந்திருக்கும். உனக்கு எங்களிடத்தில் உள்ள அன்பினால் அம்மாவை எங்களிடம் சேர்த்துக்கொண்டாய்" என்று கண்ணனிடம் கூறிக்கொண்டு பலமுறை நன்றியை அவனுக்குத் தெரிவித்துக்கொண்டேன்.

நான் அந்தக் கையை பார்க்கவில்லையெனில் நாங்கள் கடலூர் பேருந்து நிலையத்திற்குச் செல்லாமல் வீடு திரும்பியிருப்போம். அந்த நிலையில் என் தாயாரின் நிலமையை சற்று நினைத்துப் பாருங்கள்! மொழி தெரியாது, காது கேட்காது, யாரிடம் என்ன கேட்கமுடியும்? கேட்டாலும் யார் பொறுப்பாக நின்று பதில் சொல்வார். அவர்களுக்குச் சொல்லிப் புரியவைப்பது மிகவும் கடினம். இந்நிலையில் அவர் தனியாக நின்றுத் தவித்தால் என்ன ஆகியிருக்கும்? அந்தத் தவிப்பை உண்மையிலேயே நான் உணர்ந்தேன். என் கண்கள் குளமாயின. இன்றும் அதை நினைத்தால் உடல் நடுங்கும்; நெஞ்சம் பதறும். 'வீடு திரும்பலாம்' என்ற என் முடிவை தெரிந்த ஒரு நொடியில் என் மனதை திருப்பி எனக்கு உதவிபுரிந்த இறைவனின் செயலை பாருங்கள். என் அன்னையை காப்பாற்றி எங்களிடம் சேர்த்தது அன்பு இறைவனேதான் என்பது உறுதி. அதை நினைக்கையில் அவனிடத்தில் மேலும் நெருக்கம் அதிகரிக்கிறது.

என் தாய்தந்தையர் மிகுந்த கிருஷ்ண பக்தர்கள். நானும் அவ்வாறே. எங்கள் முழு குடும்பமே கிருஷ்ணபக்தர்கள்தான். இவ்வாறு இறைவன்மேல் உண்மையான நிபந்தனையற்ற அன்பும், பக்தியும் விசுவாசமும் வைத்து அனைத்திலும் இறைவனை முன் நிறுத்தி இறைவனின் வழிகாட்டுதலில் நாம் நம் கடமைகளைச் செய்தால் அனைத்திற்கும் அவனே உடனிருந்து உதவிபுரிவான் என்பது உறுதி. அதற்கு இந்நிகழ்வு ஓர் ஆதாரமும் கூட. எனக்கு இது போன்று பல இக்கட்டுகளிலும் உதவி புரிந்திருக்கிறான். அதனாலே நான் அவன்மீது மிகுந்த அன்பும் மதிப்பும் மரியாதையும் வைத்துக் கொண்டிருக்கிறேன். சுருக்கமாகக் கூறினால் நான் அவனை நிரந்தரமாகக் காதலிக்கிறேன். எனக்கு அவனைத் தவிர வேறு எதுவும் தேவையில்லை.

"இறைவன் எப்பொழுதும் நம்முடன் இருக்கிறான். உங்களது உணர்வுநிலையின் வாயிலில் அவன் நிற்கிறான். நமது அன்பிற்காக அவன் ஏங்குகிறான். இறைவன் மிகவும் நேசிக்கத்தக்கவன்" என்றெல்லாம் குருதேவர் கூறுவது உண்மையே. உலகப்பற்றற்று வாழும் ஒருவன் நிச்சயம் இறைவனை உணரமுடியும். ஏனென்றால் அவன் இறைவனைத் தேடுவான். முதலில் அவன் உலகத்தில் தனக்குப் பிடித்தமானவற்றைத் தேடியபின்னர், அதில் நிரந்தரமான அன்பு அமைதி மற்றும் திருப்தி ஆகியவை ஏதும் கிடைக்காவிடில் அவன் பின்னர் அவற்றைத் தேடமாட்டான். அதற்கு மேலே ஏதோ ஒன்று கண்டிப்பாக உள்ளது என்பதை சிந்திக்கத் தொடங்குவான்.

பின்னர் அதைத் தேடவும் தொடங்குவான். மும்முரமாக அவன் தேடத்தொடங்கும்போது இறைவனே தன்னை அவனுக்கு உணர்த்துவான். அப்பொழுது அவனுடைய சந்தேகம் தீர்ந்துவிடும். அப்படிப்பட்டவர்களுடன் இறைவன் எப்பொழுதும் இருப்பான். உலகப்பொருளை தேடவைப்பதும் இறைவனே! அவற்றை விட்டுவரச் செய்வதும் இறைவனே. அனைத்திற்கும் காரணகர்த்தா இறைவனேயாவான்!.

"ஜெய்குரு"

மீண்டும் மலரும்....

குருப்ரியா Cell No. 9894595909

www.aanmeegamalar.com









www.aanmeegamalar.com





ஆசிரியர், வெளியீட்டாளர்
C.நாகராஜன்
♦♦♦
இணை ஆசிரியர்
முருகன்
♦♦♦
துணை ஆசிரியர்கள்
ஷியாம்சுந்தர், சஞ்சனா, ஸ்ரீபதி, குருபிரியா Cell 9894595909
♦♦♦
வடிவமைப்பு
பான்ராஜாகிராபிக்ஸ்
♦♦♦

நிர்வாக அலுவலகம்
aanmeegamalar.com
நெ.16/18, பாரதீஸ்வரர் காலனி, 4வது தெரு, கோடம்பாக்கம், சென்னை 600024.
7299992699/8939499598



## ஆசிரியர் குழுவில் நீங்களும் இணையலாம்

நமது ஆன்மிகமலர்.காம் இதழின் ஆசிரியர் குழுவில் இணைந்து செயல்பட உங்ளுக்கு வாய்ப்பு தரப்படுகிறது. ஆன்மிகம் சம்பந்தப்பட்ட விஷயங்களை எழுத ஆர்வமுள்ள அன்பர்கள் எங்களை தொடர்பு கொள்ளுங்கள், விளம்பரம் பெற விரும்புபவர்களும் எங்களை தொடர்பு கொள்ளவும். உங்களை எங்களுடன் ஒருவராக இணைத்துக் கொள்கிறோம்.

தொடர்பு கொள்ளவும்
8939499598
7299992699 / 9677159070


# சாளக்கிராம மஹிமைகள்

சாளக்கிராமம் என்பது ஒரு தெய்வீகமான பூச்சியினது ஓடுதான்..! இந்த பூச்சி புனிதமான கண்டகி நதியில் தான் காணப்படுகின்றது. இது மிகவும் விரும்பி உண்ணும் உணவு துளசி இலைகள்தானாம்..! இது போன்று துவாரகை நதியில் ஒரு புனிதமான சக்கரங்கள் நிறைய அடர்த்தியாகக் காணப்படும் ஒரு வெண்ணிறமான புனிதமான கடிமப்பொருள் கிடைக்கிறது. இது "சக்ரசிலா" அல்லது துவாரகா சாளக்கிராமம் என்று அழைக்கப்படுகின்றது. இதுவும் சாளக்கிராமத்திற்கு நிகரானது..! மிகவும் புனிதமானது..!

பாத்மபுராணம் சாளக்கிராம மஹிமைகளை விஸ்தாரமாக எடுத்துச் சொல்கின்றது..!

அவற்றில் சில காண்போம்..!

- தினமும் சக்ரசிலா அல்லது சாளக்கிராமத்தினைப் பூஜிப்பவருக்கு மீண்டும் ஜனனம் இல்லை..!
- துவாரகாசிலாவும், சாளக்கிராமும் நூறு ஜன்ம பாபங்களை நீக்கும்.
- சாளக்கிராமத்தினை பூஜை செய்து அதன் தீர்த்தத்தினை பிரஸாதமாகப் பருகுபவன், ஆயிரக்கணக்கான பாபங்களைச் செய்தாலும், அவையனைத்தும் நீங்கப்பெற்று புனிதம் பெறுவான். இது பிரம்மஹத்தி பாபத்தினைக் கூட போக்கவல்லது.
- சாளக்கிராம பூஜையினைக் கிரமமாக பண்ணுபவனது வீட்டிற்கு சமீபம் நூறு யோஜனை தூரத்திற்கு அனைத்து புண்ய தீர்த்தங்கள் சூக்குமமாக நிலைபெறும்.
- சாளக்கிராம ஸந்நிதியில் ஸ்நானமும், அங்கு செய்யும் தானமும் காசியினைக் காட்டிலும் நூறு மடங்கு அதிகப்பலனைத் தரும். சாளக்கிராமம் நிறைந்துள்ள கிரஹம் காசியினைக் காட்டிலும் உயர்ந்தது.
- சாளக்கிராமத்தினைத் தரிசனம் செய்தாலும், பூஜை செய்தாலும், தீர்த்தம் எடுத்துக் கொண்டாலும், கோடி யாகம் செய்த புண்ணியமாம்..! அவனுக்குக் கர்ப்பவாஸம் மீண்டும் கிடையாது என்பது திண்ணம்..!



ஸ்ரீ சாளக்கிராம மந்திரம்

ஓம் விஷமன் நாசாய வித்மஹே,
விஷ்ணு வாஸாய தீமஹி,
தன்னோ சிலா : ப்ரசோதயாத் ||

ஓம் நமோ பகவதே விஷ்ணவே ஸ்ரீ ஸாலக்ராம நிவாஸினே ஸகல துரித நிவாஸினே, ஸர்வா பீஷ்ட பல ப்ரதாய ஸாலக்ராமாய ஸ்வாஹா||

தொகுப்பு: கீதாராணி





## தொடர்ந்து வெளிவர உதவுங்கள்

நமது ஆன்மிகமலர் டிரஸ்ட்டின் மூலம் வெளிவரும் ஆன்மிகமலர் மெயில் புத்தகத்தினை பல்வேறு இணையதளங்களில் வெளியிட முடிவு செய்துள்ளோம். இதற்கு முந்தைய இதழ்களையும் வரப்போகின்ற மற்ற இதழ்களையும் தொடர்ந்து இணையதளத்தில் நிரந்தரமாகவும், இலவசமாகவும் ஆன்மிக அன்பர்கள் தொடர்ந்து பார்த்து, டவுன்லோடு செய்யும் வகையில் பணிகள் தொடர்கின்றன. எங்கள் பணிக்கு உங்களால் முடிந்த உதவிகளை செய்யலாம். நீங்கள் செய்யும் சிறு உதவி எங்களுக்கு பெரிய உதவியாக இருக்கும்.

AANMEEGA MALAR TRUST
ACCOUNT NO. 310601011001269
IFSC CODE:VIJB0003106
MICR CODE: 600029043
VIJAYA BANK (KODAMBAKKAM BRANCH)

மேலும் தொடர்பு கொள்ளவும்:
7299992699 / 8825844033
aanmeegamalar@gmail.com

# வைசேடிகம்

புராணங்களில் அங்கொன்றும் இங்கொன்றுமாக வருகின்ற கௌதமரை நாம் அகலிகைக்கு சாபம் கொடுத்தவர் என்பதாக மட்டுமே இதுவரை அறிந்திருந்தோம். அவருடைய தத்துவத்தை ஆராய்கிற போது அவருக்குள் இருந்த ஆழமான சிந்தனை அறிவுக் கூர்மை நம்மை வியப்பில் ஆழ்த்தாமல் இருக்கவில்லை. அக்காலத்தில் ரிஷிகள் என்பவர்கள் கோபம் கொள்வதற்கும், சாபம் கொடுப்பதற்கும் மட்டுமே தெரிந்தவர்கள் என்று நினைத்தவர்களுடைய எண்ணங்கள் இப்போது சற்று மாறி இருக்கும் என்று நினைக்கிறேன்.

நமது இந்திய சிந்தனை வரலாற்றை ஆராய்கின்ற போது பல சிக்கல்களை எதிர்கொள்ள நேரிடும். ஆராய்ச்சி செய்பவர்கள் தங்களுக்கென்று சில கொள்கைகளையும், கோட்பாடுகளையும் வைத்துக்கொண்டு அதை ஒட்டியே தமது ஆராய்ச்சிப் பொருளும் அமைய வேண்டுமென்று எதிர்பார்ப்பார்கள். நாத்திக வாதத்தில் நாட்டமுடையவர்கள் ஆத்திக சிந்தனைகள் எந்த அளவு கேவலமானது என்பதை காட்ட முனைவார்கள். அதே போலவே ஆத்திகவாதிகளும் நாத்திகத்தை சிறுமைப்படுத்த பாடுபடுவார்கள். ஒரு சிலர் மட்டுமே ஆத்திகம், நாத்திகம் இரண்டிலும் உள்ள நல்ல கருத்துக்களையும் தீய கருத்துக்களையும் பாகுபாடு இல்லாமல் மக்களின் முன்னால் வைப்பார்கள்.

குறிப்பாக சொல்வது என்றால் தத்துவங்களின் கால நிலைகளை கணிக்கிற போது மிக பயங்கரமான சச்சரவுகள் அறிஞர்கள் மத்தியில் ஏற்படுகிறது. சனாதன சிந்தனைக்கு எதிராக இருப்பவர்கள் கௌதம புத்தரின் காலத்திற்கு பிறகே இந்தியாவில் தத்துவ விசாரணைகள் தோன்றின என காட்டுவதற்காக மற்ற தத்துவ பிரிவுகளை எந்தளவு திரிபு செய்ய முடியுமோ அந்தளவு திரிப்பார்கள். பௌத்தத்திற்கு எதிரான சிந்தனை உடையவர்கள் புத்தரின் சிந்தனை காலத்தால் மிகவும் பிந்தியது என்று காட்டுவதற்கு அரும்பாடு படுவார்கள். இதனால் ஏற்படுகிற விளைவு என்னவென்றால் புதியதாக தத்துவங்களை அறிந்துகொள்ள விரும்பி அதனுள்ளே நுழைபவர்கள் வெகுவாக குழம்பி விடுவார்கள்.

வைசேடிகம் என்ற தத்துவமும் இத்தகைய வாத பிரதிவாதங்களில் சிக்கி தவிக்கின்ற ஒன்றாக இருந்து வருகிறது. வைசேடிகத்தை உருவாக்கிய கணாதர் புத்தருக்கு பின் தோன்றியவர் என்று பலர் வாதிடுகிறார்கள். ஆனால், அடிப்படையான உண்மை என்னவென்றால் கௌதம மகரிஷி உருவாக்கிய நியாயம் என்ற சிந்தனை மரபு கணாதரரின் வைசேடிக சிந்தனை மரபின் தொடர்ச்சியாகும். கௌதமர் புத்தருக்கு முன்னால் வாழ்ந்தவர் என்றால் அவருக்கும் முன்னால் இருந்தவர் கணாதரர் ஆவார். பிறகு எப்படி இவர் புத்தரை விட இளையவராக இருக்க முடியும்? இந்த அடிப்படை சிந்தனையை மறந்தே அறிஞர்கள் வாதிடுவது விந்தையிலும் விந்தை.

வைசேடிகம் என்பது மிக பழமையான சிந்தனை தொகுப்பு. இந்த சிந்தனையை தழுவி தான் நியாய தத்துவம் தோன்றியது எனலாம். கபிலருடைய சாங்கிய சிந்தனையையும், பதஞ்சலி மகரிஷியின் யோக சிந்தனையையும் ஒன்றாக இணைத்து சாங்கிய யோகம் என்று அழைப்பார்கள் அதே போன்று தான் கௌதமரின் சித்தாந்தத்தையும், கணாதரரின் சிந்தனையையும் இணைத்து நியாய வைசேடிகம் என்று அழைப்பது மரபு. உண்மையில் நியாய தத்துவத்திற்கும் வைசேடிக தத்துவத்திற்கும் பெரிய வித்தியாசம் இல்லை. ஆனால் அடிப்படையில் சில பொருட்களுக்கு வைசேடிகம் கொடுக்கின்ற விளக்கம் நியாய சித்தாந்தத்தை மிகத் தெளிவாக புரிந்துகொள்ள உதவியாக இருக்கும்.

நிஜமாக இந்த உலகத்தில் இருப்பது மனம் என்ற ஒன்று மட்டும் தானா? அல்லது வெளியே பார்க்கின்ற பொருட்களும் இருக்கின்றதா? என்ற இந்த கேள்வி தான் இந்திய சிந்தனை மரபில் அடிக்கடி தோன்றுகிற கேள்வியாகும். பொருள் என்பது பொய். மனம் என்பதே மெய். மனம் தான் பொருட்கள் பற்றிய சிந்தனைகளுக்கு அடித்தளம் ஒரு பொருளை இது பொருள் என்று உணர்வது அடையாளப்படுத்துவது மனம் தான். மனம் என்பது இல்லை என்றால் பொருள் என்பது இல்லாததாகி விடும். ஆகையால் மனம் தான் உண்மை பொருளாக தெரிவது எல்லாமே மாயை கற்பனை பொய்கள் என்று வாதிடுபவர்கள் நிறைய பேர் உண்டு.

மனதை இல்லை என்று சொல்லவில்லை. மனம் என்ற ஒன்று இருக்கிறது மனம் எப்படி இருக்கிறதோ அதே போலவே வெளியிலே பொருட்களும் இருக்கிறது மனம் உள்ள பொருள் என்றால் பொருட்களும் உள்ளது தான் இல்லாதது இல்லை இல்லாதது ஒன்றை இருப்பதாக உணர முடியாது. எனவே இரண்டும் பொய் என்று சொல்வது தவறு இரண்டுமே உண்மை என்று வாதிடுவதில் வைசேடிகம் முன்னணியில் இருக்கிறது. அதனாலேயே வைசேடிக சிந்தனையை மெய்மை வாதம் என்ற சிறப்பு பெயர் கொடுத்து அறிவுலகம் அழைக்கிறது.



பொருட்கள் உண்மை என்றால் பொருட்களால் ஆன உலகமும் உண்மை என்றாகிவிடுகிறது. இப்படி உண்மையான உலகம் எதிலிருந்து தோன்றியது? இது தோன்றுவதற்கு மூலகாரணம் ஒன்றா? இரண்டா? அல்லது பலவா? என்பது இந்திய சிந்தனை மரபில் மிக முக்கியமான கேள்வியாகும். இந்த கேள்விக்கு பதிலை தராமல் எந்த தத்துவ ஞானமும் தப்பித்துவிட முடியாது. மனம் மட்டும் தான் இருக்கிறது பொருட்கள் இல்லை என்று கூறுபவர்கள் மிக சுலபமாக இந்த கேள்வியிலிருந்து தப்பித்து விடலாம். அதாவது பொருட்களால் தான் உலகம் ஆனது எனும் போது பொருட்களே இல்லை அவைகள் கற்பனைகளே என்று கொண்டால் உலகம் என்பதும் இல்லாத பொருள் மாயா ஜால வஸ்து என்றாகிவிடுகிறது. இல்லாத பொருள் ஒன்றால் ஆனால் என்ன? ஆகாவிட்டால் என்ன? ஆனால் மனமும் இருக்கிறது பொருளும் நிஜமாக இருக்கிறது என்பவர்களுக்கு இந்த கேள்வி சற்று சிக்கலானது.

உலக உற்பத்திக்கு காரணமானது ஒரே ஒரு பொருளென்றால் உலகத்தில் மாறுபட்ட தன்மைகள் இருக்காது. பாறையை பார்த்தாலும், மலரை பார்த்தாலும், நெருப்பை பார்த்தாலும் வித்தியாசம் இல்லாமல் எல்லாம் ஒன்றாகவே இருக்கும். எனவே உலகம் என்பது ஒரு பொருளிலிருந்து தோன்றவில்லை. அது பல பொருளிலிருந்து தோன்றியிருக்க வேண்டும். அதனால் தான் மரத்தின் தன்மை ஒருவிதமாகவும், மண்ணின் தன்மை ஒருவிதமாகவும் உடல்களின் சதைகளின் தன்மை வேறு விதமாகவும் இப்படி பலப்பல விதமாக இருக்கிறது என்று கணாதர் ஆழ்ந்த சிந்தனைக்குரிய விடையை தருகிறார்.





ஆன்மிகமலர் மெயில் புக்





www.aanmeegamalar.com

உலகம் என்பது மாயை என்றால் பிரபஞ்சமும் மாயை என்றாகிவிடுகிறது. இந்த வாதத்தை ஒரு விவாதிற்காக ஒத்துக்கொண்டால் பிரம்மம் ஒன்று தான் நிஜம் மற்றவைகள் எல்லாம் மாயை என்றால் பிரம்மம் இருக்கின்ற வரையில் மாயை என்பதும் இருக்கும் அப்போது மாயா வசத்தால் உருவான உலகமும் பிரபஞ்சமும் இருந்து கொண்டே இருக்கும் அழிவு என்பதே இவைகளுக்கு கிடையாது. என்பதை ஒத்துக்கொள்ள வேண்டிய நிலைவரும். ஆனால் உலகம் என்பது பொருள் பிரபஞ்சம் என்பதும் பொருள் என்றால் ஜடப்பொருள் என்றுமே நிலையானது அல்ல ஒரு குறித்த காலத்திற்கு பிறகு அழிந்து போகக்கூடியது பொருட்களால் தான் பிரபஞ்சம் உருவானது என்று கருதுகிற வைசேடிக தத்துவம். இந்த உலகமும் பிரபஞ்சமும் ஒருகாலத்தில் அழிந்து போய்விடும் என்று கூறுகிறது.

இப்படி அழிந்து போகக் கூடிய பிரபஞ்சம் அழியாத பொருளிலிருந்து உற்பத்தி ஆவதாக அது கருதுகிறது. அதாவது பொருளாக இருந்தது உலகமாக மாறுகிறது என்றால் உலகம் அழிந்த பிறகு பொருள் தான் இருந்த இடத்திற்கே மீண்டும் போய் சேர்ந்துவிடும் அல்லவா? அதனால் பொருள் அழிவற்றது என்று கருதப்படுகிறது. இப்படி அழிவற்ற பொருளின் மூலமாக இருப்பது அணுக்கள் என்று கணாதரர் கருதுகிறார். உலக பொருட்கள் அனைத்தும் பஞ்ச பூதங்களால் ஆனது பிரளயம் ஏற்பட்ட பிறகு பஞ்ச பூதங்கள் தனித்தனியாக பிரிந்து போய்விடும்.




நிலம் தனியாக நிற்கும். நீர் தனியாக நிற்கும் நெருப்பு தனியாக நிற்கும் காற்றும் தனியாக நிற்கும் ஆகாயம் கூட தனியாக பிரிந்து சென்றுவிடும். இதில் ஆகாயம் ஒன்றை தவிர மற்ற நான்கு பூதங்களும் தங்களுக்குள்ளேயே தனித்தனியாக பிரிந்துபோகும் தன்மை உடையது. உதாரணமாக சொல்வது என்றால் நிலம் தனித்த ஒரு பூதம் இந்த நிலம் கூட ஒன்றாக இருக்காமல் தனித்தனியாக பிரிந்துவிடும். அப்படி பிரிந்ததையும் மேலும் கூறு கூறாக பிரிக்கலாம் இப்படி பிரித்துக்கொண்டே போனால் கடைசியில் பிரிக்கவே முடியாமல் ஒரு பகுதி வரும் அல்லவா? அந்த பகுதிக்கு பெயர் தான் அணு என்பது இதை பரமாணு என்று சொல்லலாம். அதாவது பகுதிகள் அற்ற பிரிக்க முடியாத அணு என்பது இதன் பொருளாகும். ஆகவே இந்த பிரபஞ்சத்தில் கடல் அழிந்து போகும் மரம் செடி கொடி அழிந்து போகும். சூரியனும் சந்திரனும் கூட இல்லாமல் போய்விடும். ஆனால் அணு என்ற ஒன்று மட்டும் எப்போதுமே இல்லாமல் போகாது. அதனால் தான் அந்த அணு படைப்பிற்கு மூலமாக இருக்கிறது என்று கணாதர் சொல்கிறார்.

அணுக்கள் என்பது தான் ஒரு பொருளின் ஆரம்பமும், முடிவும். படைக்கப்படும் போதும் அணுதான் வந்து நிற்கிறது. அழிக்கப்படும் போது அணுதான் மிஞ்சி நிற்கிறது. அதாவது கழுதை தேய்ந்து கட்டெறும்பானது என்று பழமொழி சொல்வார்களே அதே போல பொருட்கள் அழிந்து அழிந்து இறுதியில் அணுவாக மாறிவிடும். அந்த அணுவும் அழியும் அல்லது பிரியும் என்று சொன்னால் இறுதியில் எதுவும் இல்லாமல் வெறும் சூன்யம் தான் இருக்கும் என்ற நிலை வந்துவிடும். சூன்யமாக ஒன்றுமே இல்லாமல் போய்விட்டால் ஒரு பெரிய அபாயம் இருக்கிறது. அழிவுக்கு பிறகு படைப்பு நடக்க வேண்டும் அல்லவா? அதற்கு எந்த பொருளும் இல்லாமல் போய்விடும். இல்லாமல் இருந்து அதாவது சூன்யத்திலிருந்து எதையும் உற்பத்தி செய்ய இயலாது. அதனால் தான் அணுவை அழிக்க முடியாது என்று கணாதர் சொல்கிறார்.

மேலும் இங்கே நாம் கண்களால் காணுகின்ற பொருட்கள் அனைத்தும் அது மிகப்பெரும் மலையாக இருந்தாலும் ஆற்றில் அடித்து வருகின்ற கூழாங்கல்லாக இருந்தாலும் அது அணுக்களால் ஆனது தான் பொருட்களில் சிறியதும் உண்டு பெரியதும் உண்டு. சிறிய பொருள் உருவாக அதற்கேற்ற அணுக்களும் பெரிய பொருள் உருவாக அதற்கேற்ற அணுக்களும் தேவைப்படும். ஒரு பொருள் பிரிந்து போகின்ற போது ஒரு அளவோடு மட்டும் தான் அது பிரியுமே தவிர அளவுக்கு மீறி பிரிந்து விடாது. இறுதியில் இருப்பது அணு ஒன்று தான் என்பதை நம்பவில்லை என்றால் அணுக்களின் எண்ணிக்கைக்கு தகுந்தபடி பொருட்களின் பருமன் அமைகிறது என்ற சித்தாந்தத்திற்கு இடமில்லாமல் போய்விடும். ஆனால் சிறிதும் பெரிதுமாக பல பொருட்கள் இருப்பதை ஒவ்வொரு நிமிடமும் பார்க்கிறோம். எனவே அழியாமல் இருப்பது அணு ஒன்று தான் என்பதை மீண்டும் மீண்டும் நிரூபிக்க எதார்த்த காட்சிகளே சாட்சிகளாக இருக்கிறது.

உலக பொருட்கள் அணுக்களால் ஆனது என்று ஜைன மகரிஷி மகாவீரும் ஏற்றுக்கொள்கிறார் அவரை போலவே கிரேக்க தத்துவ ஞானிகளில் ஒருவரான எபிகியூரஷ் டெமாக்ரேஸ் போன்றோர்களும் ஏற்கிறார்கள். ஆனால், இவர்களது ஏற்பு கொள்கைகளுக்கும் கணாதரரின் அணுக் கொள்கைக்கும் சிறிது வித்தியாசம் உண்டு. ஒரே இயல்புடையதாக அணுக்கள் இருந்தாலும் கூட அவைகள் ஒன்றோடு ஒன்று இணைந்து ஒரு பொருளாக உருமாறுகிற போது அணுக்களின் எண்ணிக்கையின் வித்தியாசத்தாலும் சேர்ந்த தேகத்தில் வித்தியாசத்தாலும் பொருட்கள் பலவிதமான தன்மை கொண்டதாக இருக்கிறது என்று அவர்கள் கருதுகிறார்கள்.

ஆனால் வைசேடிக தத்துவத்தை உலகிற்கு தந்த கணாதர் இதை ஏற்க மறுக் கிறார். அணுக்கள் ஒவ்வொன்றும் ஒரே தன்மை உடையது அல்ல ஒவ்வொரு அணுவும் வித்தியாசமான மாறுபட்ட தன்மைகளை கொண் டது. அணுவில் ஒற்றுமை என்பது அதனுடைய தரத்தை பொறுத்து இருக்கிறதே தவிர தன்மையை பொறுத்து இருப்பது இல்லை நிலத்திலுள்ள அணு ஒருவிதமாகவும்,நீரிலுள்ள அணுவேறுவிதமாகவும், நெருப் பிலுள்ள அணு மற்றோருவிதமாகவும், காற்றிலுள்ள அணு மற்றோருவிதமாகவும் பலத் தன்மைகளை கொண்டதாக இருக்கிறது. இப்படி பல தன்மைகளோடு, பல குணத்தோடு இருப்பதனால் தான் பலவிதமான பொருட்கள் தோன்ற முடிகிறது.

நிலம், நீர், காற்று, நெருப்பு என்று நான்குவித பூதத்திலிருந்து அணுக்கள் வருவதனால் நான்கு வித குணத்தில் அணுக்கள் அமைந்தாலும் கூட அந்த நான்கு குணத்திலும் ஒன்றுக்கொண்று இணைந்தும் பிரிந்தும் பலவித குணங்கள் இருப்பதே உலகில் எண்ணிலடங்காத பொருட்கள் இருப்பதற்கு காரணமாக இருக்கிறது.

பொருட்கள் பிரிந்து போனால் அணுவாக இருக்கிறது. அணுக்களெல்லாம் ஒன்று சேர்ந்து மீண்டும் பொருட்களாக வருகிறது என்று கணாதர் பிரபஞ்ச சிருஷ்டியின் ரகசியத்தை தனது கண்ணோட்டத்தில் கூறுகிறார். படைப்பின் மூல பொருட்கள் இப்படி தான் இருக்கின்றன என்று கூறுகிற வைசேடிக தத்துவம் படைப்பு எவ்வாறு நிகழ்கிறது என்பதையும் அறிவார்ந்த நிலையில் நமக்கு விளக்குகிறது. முதலில் பஞ்ச பூதங்களில் நான்கு மட்டுமே இணைந்து பொருளாக உருமாறினாலும் இறுதியில் ஆகாயத்தின் தன்மை பொருட்களோடு கலந்த பிறகு தான் அந்த பொருளின் சிருஷ்டி பரிபூரணமாக நிறைவடைகிறது.

யோகி ஸ்ரீ ராமானந்த குரு
மேலும் தொடர்பு கொள்ளவும்
போன்: 9442426434





## சூலத்தில் எலுமிச்சை குத்தப்படுவதன் காரணம்?



சூலத்தில் எலுமிச்சை குத்தப்படுவதற்கு காரணம் எலுமிச்சை தேவ கனி என்பதால் ஆகும். முக்கனிகளான மாம்பழத்தில் வண்டு குற்றம் உண்டு. பலாவில் வியர்வை குற்றம் உண்டு. வாழையில் புள்ளி குற்றம் உண்டு. ஆனால் எலுமிச்சையில் மட்டும் இவ்வித குற்றங்கள் இல்லை. மனிதனுடைய எண்ணங்களை ஈர்க்கும் சக்தி மற்ற கனிகளைக் காட்டிலும் எலுமிச்சைக்கு அதிகம் உண்டு. அதனால்தான் சூலாயுதத்தில் எலுமிச்சை குத்தப்படுகிறது.

# 144 வருடத்திற்கு ஒருமுறை வரும் மகா புஷ்கரம்

# புண்ணியம் கிடைக்க மயிலாடுதுறை வாங்க

குருபகவான் ஒரு ராசியிலிருந்து மற்றொரு ராசிக்கு இடம் பெயரும்பொழுது அந்த ராசிக்கு உரிய நதிகளில் புஷ்கர விழா கொண்டாடப்படும் கடந்த 2015 ஆம் ஆண்டு குருபெயர்ச்சியின் பொழுது ஆந்திர மாநிலம் கோதாவரியில் புஷ்கர விழா கொண்டாடப்பட்டது நிகழும் 2017 ஆம் ஆண்டில் குருபகவான் கன்னி ராசியிலிருந்து துலாம் ராசிக்கு இடம்பெயர இருப்பதால் துலாம் ராசிக்கு உரிய நதியான காவிரியில் புஷ்கர விழா கொண்டாடப்பட உள்ளது.

144 ஆண்டுகளுக்கு ஒரு முறை மட்டுமே மயிலாடுதுறையில் உள்ள துலாக்கட்டத்தில் இந்த விழா நடைபெறும் என்பதால் இதனை மகா புஷ்கர திருவிழா என்றும் வழங்குவர். வரும் 12.09.2017 (செப்டம்பர் 12) முதல் 24.09.2017 (செப்டம்பர் 24) வரை கொண்டாடப்பட இருக்கும் இந்த மயிலாடுதுறை துலாக்கட்டம் மகா புஷ்கர திருவிழாவுக்காக 10 குதிரைத்திறன் கொண்ட போர்வெல் அமைக்கவும், பாதுகாக்கப்பட்ட குடிநீர், கழிப்பறை வசதிகள் ஏற்படுத்தவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இந்த துலாக்கட்ட மகா புஷ்கர விழாவில் கலந்துகொண்டு நீராட நாடு முழுவதிலும் இருந்து ஆதீனங்கள், பீடாதிபதிகள், பக்தர்கள் என பல்லாயிரக் கணக்கானோர் மயிலாடுதுறைக்கு வருகை தருவர்.

அதனால் பல்வேறு சிறப்பு ஏற்பாடுகள் செய்ய மாவட்ட நிர்வாகம் திட்டமிட்டுள்ளது. இதற்கு பிறகு இந்த விழாவானது 2161 ஆம் ஆண்டில் தான் நடைபெறும்.

துலா மாதமான ஐப்பசியில் உலகிலுள்ள அறுபத்தாறு கோடி தீர்த்தங்களும், பதினான்கு லோகங்களிலுள்ள புண்ணிய தீர்த்தங்களின் தேவதைகளும் காவிரி நதியில் சங்கமமாவதால், அதில் நீராடுபவர்களின் எல்லாவிதமான விருப்பங்களும் நிறைவேறுவதுடன், இறுதிக் காலத்தில் எமவாதனை இன்றி முக்தியும் கிட்டும் என்று சாஸ்திரங்கள் கூறுகின்றன.



ஆதி, இடை, கடை என்னும் மூன்று அரங்கங்களையும் தன்னகத்தே கொண்டு, சதாசர்வ காலமும் பகவான் நாராயணனின் திருவடியைத் தழுவி வணங்கும் காவிரியின் பேறும் பெருமையும் தன்னிகறற்து.

ஐப்பசி முதல் தேதியில் திருச்சிக்கு அருகிலுள்ள திருப்பராய்த்துறையிலும் இரண்டாவது நீராடலை ரங்கம் அம்மா மண்டபம் படித்துறையிலும், கடைசி தேதியன்று மயிலாடுதுறை நந்திக்கட்டத்திலும் முழுக்கும் போடவேண்டும் என்பது ஐதீகம்.

தலைக்காவிரி, ராமபுரம், ரங்கம், திருப்பராய்த்துறை, திருவானைக்காவல், சப்தஸ்தானம், திருவையாறு, புஷ்பாரண்யம், திருச்சாய்க்காடு, திருவெண்காடு, மயிலாடுதுறை, கும்பகோணம், திருவிடை மருதூர், முதலிய காவிரிநதி நீர்த்துறைகள் துலா மாதத்தில் நீராட சிறந்தவையாக கருதப்படுகின்றன.

(புஷ்கரம் பற்றிய வரலாறும் சிறப்புகளையும் 34ம் பக்கத்தில் விரிவாக தரப்பட்டுள்ளது)

– சரவணன், குடியாத்தம்
9488916788







# தமிழ் மாதப் பௌர்ணமியில் அம்மனுக்கு உகந்த வழிபாட்டு முறைகள்

அம்பிகை வழிபாட்டிற்கு பௌர்ணமி தினம் சிறப்பானதாக குறிப்பிடப்படும் புனித நாளாகும். அன்று அம்பாளை வழிபட்டால் குடும்பத்தில் ஒளி உண்டாகும். துன்பங்களாகிய இருள் நீங்கி நன்மை கிட்டும். பௌர்ணமி அன்று உபவாசம் இருந்து வழிபட்டால் சகல சௌபாக்கியங்களும் பெறலாம் என்பது நம்பிக்கை.

பௌர்ணமி பூஜை பொதுவாக அனைவருக்கும் நன்மை செய்யக்கூடிய பூஜை என்றாலும் பெண்களுக்கு சிறப்பான பலன்களை அளிக்கக் கூடியது. திருமணமான பெண்கள் மாங்கல்ய பாக்கியம் நிலைக்கவும், திருமணமாகாத பெண்கள் திருமணப் பேறு கிட்டவும் இந்த பூஜை செய்து அம்பிகையின் அருள் பெறலாம்.

சித்திரை மாதத்தில் சித்திரை நட்சத்திரத்தன்றும், வைகாசியில் விசாக நட்சத்திரத்திலும், ஆனியில் மூல நட்சத்திரத்திலும், ஆடியில் உத்திராட நட்சத்திரத்திலும், ஆவணியில் அவிட்ட நட்சத்திரத்திலும், புரட்டாசியில் உத்திரட்டாதி நட்சத்திரத்திலும், ஐப்பசியில் அசுவினி நட்சத்திரத்திலும், கார்த்திகையில் கிருத்திகையிலும், மார்கழியில் திருவாதிரை நட்சத்திரத்திலும், தையில் பூசத்தன்றும், மாசியில் மாசி மகத்தன்றும், பங்குனியில் உத்திரத்தன்றும் பொதுவாக பௌர்ணமி தினம் வரும். ஓரிரு மாதங்களில் ஒருநாள் முன், பின்னாகவும் வருவதுண்டு.

சித்திரை மாத பௌர்ணமியன்று அம்பாளுக்கு பூப்போட்ட வஸ்திரம் சார்த்தி, பத்மராகம் என்ற நவரத்தினக்கல் பதித்த ஆபரணம் அணிவிக்க வேண்டும். மஞ்சள் கலந்த சாதம், பானகம், ஏலம், கிராம்பு, பச்சைக் கற்பூரம் சேர்ந்த தாம்பூலம் நைவேத்தியம் செய்ய வேண்டும். இந்தப் பூஜை செய்வதால் குழந்தை பாக்கியம் இல்லாதவர்களுக்கு அந்தப் பேறு கிட்டும். சித்திரை மாதத்தில் சித்திரை நட்சத்திரத்துடன் கூடிய சித்ரா பௌர்ணமி என்றால் மிகவும் விசேஷம், வைகாசி பௌர்ணமியில் அம்மனுக்கு நீலநிற ஆடையும், தங்க ஆபரணமும் அணிவித்து அலங்கரிக்க வேண்டும். சந்தனாபிஷேகம் செய்வது சிறப்பு. எலுமிச்சை சாதம், சீரகமும், சர்க்கரையும் கலந்த சாதம், விளாம்பழம் இவற்றை அம்பிகைக்கு படைத்து வழிபட வேண்டும். இப்பூஜையால் பிறவி எடுக்காத புண்ணிய கதி அடையலாம். வைகாசியில் விசாக நட்சத்திரத் துடன் கூடிய வைகாசி விசாகமும் விசேஷமாக கொண்டாடப்படுகின்றன.

ஆனி மாத பௌர்ணமியில் அம்பிகைக்கு கருப்பு வஸ்திரமும், முத்தாபரணமும் அணிவிக்க வேண்டும். வெள்ளெருக்கம்பூ, செண்பகப்பூ இவற்றால் அர்ச்சனை செய்து முக்கனிகளையும், உளுத்தம் பருப்பு சாதத்தையும் நைவேத்தியம் செய்து வழிபட வேண்டும். இந்த வழிபாட்டின் மூலம் எடுத்த காரியம் யாவிலும் வெற்றி பெறலாம். ஆனி மாதப் பௌர்ணமியில் சுமங்கலிகள் சாவித்திரி விரதம் அனுஷ்டித்து மாங்கல்ய பலம் அடையலாம்.

ஆடி பௌர்ணமியில் சிவப்பும், மஞ்சளும் கலந்த ஆடை சார்த்தி, சிவப்புக்கல் ஆபரணம் அணிவித்தல் வேண்டும். பூக்களால் அர்ச்சனை செய்வதோடு, அறுகம்புல்லாலும் அர்ச்சிப்பது சிறப்பானது. அன்றைய தினம் அம்பிகைக்கு பாலாபிஷேகம் செய்து, வாழைப்பழம் கலந்த சாதத்தை நைவேத்தியம் செய்வது


ஆன்மிகமலர் மெயில் புக்

சிறப்பானதாகும். இந்த பூஜையால் புண்ணிய கதி கிட்டும். ஆடி மாதத்தில் வடநாட்டில் வட சாவித்திரி விரதம், கோபத்ம விரதம் ஆகியவற்றை மேற்கொள்கின்றனர்.



ஆவணி மாத பூஜையில் நான்கு வண்ணங்கள் கொண்ட ஆடை சார்த்தி வைடூரிய ஆபரணம் அணிவிக்க வேண்டும். நாட்டுச் சர்க்கரையால் அபிஷேகம் செய்து, நெய் சாதம் நைவேத்தியம் செய்ய வேண்டும். இந்த பூஜை செய்வதன் மூலம் கடன் தொல்லைகள் தீர்ந்து நன் மை பெறலாம். ஆவணி பௌர் ணமியில் ரட்சா பந்தனமும் விசேஷமானது.

புரட்டாசி பௌர்ணமி யன்று அம்மனுக்கு நான்கு வண்ணங்களில் ஆடையும், பிரவாள ரத் தினக்கல் ஆபரணமும் அணிவித்தல் வேண்டும். மல்லிகைப் பூவால் அர்ச்சிப்பது சிறப்பானது. நைவேத்தியம் – இளநீர். இந்த பூஜையின் பலனாக சகல சௌபாக்கியங்களும் கிட்டும். புரட்டாசி பௌர்ணமியில் உமாமகேஸ்வர விரதமும் மேற்கொள்வது சிறப்பானது.

ஐப்பசி பௌர்ணமியில் அம்பிகைக்கு இந்திர நீல நிறக்கல் ஆபரணம் அணிவிக்க வேண்டும். எந்த நிறத்தில் வேண்டுமானாலும் ஆடை சார்த்தலாம். அன்றைய தினம் அன்னாபிஷேகம் செய்து மகிழம்பூ, வில்வம், பாதிரிப்பூ ஆகியவற்றால் அர்ச்சிக்க வேண்டும். மிளகு சாதம், கரும்புச்சாறு இவற்றை நைவேத்தியம் செய்ய வேண்டும். இந்த பூஜை செய்வதன் மூலம் எல்லா காரியங்களிலும் வெற்றி கிட்டும்.

ஐப்பசி பௌர்ணமியில் லட்சுமி விரதமும் மேற்கொள்வார்கள்.கார்த்திகை மாத பௌர்ணமியன்று பூப்போட்ட ஆடையும், ருத்தி ராட்ச மாலையும் அணிவித்து நெய்தீபம் ஏற்றி வழிபட வேண்டும். வெண் பொங்கல், நெய் பொங்கல் ஆகியவற்றை நைவேத்தியம் செய்ய வேண்டும். அனைத்து நலன்களையும் பெற்றுத் தரும் பூஜையாக இது நம்பப்படுகிறது. கார்த்திகை பௌர்ணமியில் கார்த்திகை தீபத் திருவிழா கோலாகலமாக கொண்டாடப்படுகிறது.

மார்கழி திருவாதிரை நாளில் அம்பிகைக்கு வெண்ணிற ஆடை உடுத்தி ஒற்றைப்படை எண்ணிக்கையில் நவரத்தினக்கல் பதித்த ஆபரணம் அணிவிக்க வேண்டும். தாமரைப்பூவால் அர்ச்சித்தலும், பஞ்சாமிர்த அபிஷேகம் செய்தலும் சிறப்பானவை. களி நைவேத்தியம் செய்ய வேண்டும். இப்பூஜை செய்வதன் மூலம் அம்பிகையின் பூரண அருளைப் பெறலாம். கஷ்டங்கள் நீங்கும், நோய்கள் குணமாகும், எடுத்த காரி யங்கள் அனைத்திலும் வெற்றி கிட்டும். மார்கழி மாத திருவாதிரை நட்சத்திரத்துடன் கூடிய பௌர்ணமியில் திருவாதிரை திருநாள் விரதத்துடன் அனுசரிக்கப்படுகிறது.

தை மாத பௌர்ணமி யன்று அம்மனுக்கு மஞ் சளும், சிவப்பும் கலந்த ஆடை அணிவித்தல் வேண்டும். தேன் அபிஷே கம் சிறப்பானது. வில்வம், வெள்ளை தாமரைப்பூ, நந்தியாவட்டை இவற்றால் அர்ச்சனை செய்தல் நற்பலனை தரும். நைவேத்தியப் பொருள் பாயசம். ஆயுள் விருத்தியை தரும் இந்த பூஜை. தை மாதப் பௌர்ணமியில் தைப்பூசம் சிறப்பாக கொண்டாடப்படுகிறது. மாசி மாத பௌர்ணமி தினத்தில் செய்யும் வழிபாடு சிவதீட்சை பெற்ற பலனை தரக் கூடியது. வெள்ளை நிறம் கலந்த 5 வண்ணங்கள் கொண்ட ஆடை சார்த்தி, ஸ்படிக மணியால் மாலை அலங்காரம் செய்ய வேண்டும். சர்க்கரைப் பொங்கல் படையல் அம்பிகைக்கு ஏற்றது.

பங்குனி மாதத்தில் பௌர்ணமியன்று மஞ் சள் நிற வஸ்திரம் சார்த்தி, கோமேதகம் பதித்த ஆபரணம் அணிவிக்கலாம். தயிர் அபிஷேகம் சிறப்பானது. தாமரைப்பூவால் அர்ச்சனை செய்வதும், பருப்பு–நெய் சேர்த்த சாதம் நைவேத்தியம் செய்தலும் சிறப்பானது. இந்த பூஜையின் மூலம் புண்ணிய கதி அடையலாம். ஒவ்வொரு மாத பௌர்ணமியையும் சிறப்பு பண்டிகைகளாகவே கொண்டாடுவது விசேஷமானதாக கருதப்படுகிறது.

துன்பங்கள் தொலைய, துயரங்கள் நீங்க எம்மைப் பீடித்த தோஷங்கள் மறைய, வாழ்வில் நிம்மதி நிலைக்க, அன்னையை ஆசீர்வதிக்க சித்திரா பௌர்ணமி தினத்திலே விரதமிருந்து அம்மனையும் சித்திர புத்திரனாரையும் வழிபட்டு அருளும் நலமும் பெறுவோமாக.



வாருங்கள் எங்களுடன் பயணிக்க...

**உலக அளவில் இமெயில் மூலம் இலவச இதழாக வெளிவரும் நமது இதழில் ஆன்மிக நாட்டமும் விருப்பமும் உள்ள அன்பர்கள் வரவேற்கப்படுகிறார்கள்.**

**உங்களுக்கு தெரிந்த திருக்கோயில்கள், மகான்கள், சித்தர்கள், இந்துமத சடங்கு-சம்பிரதாயம் போன்றவற்றை**

(உங்களது பெயர், முகவரி, தொ.பே.எண்ணுடன்)

**எங்களுக்கு தெரியப்படுத்துங்கள். நமது வாசகர்கள் பயன்படுத்த பிரசுரிப்போம். தெரியாதவர் தெரிந்து கொள்ள எங்கள் பயணத்தில் நீங்களும் இணைந்து பயணியுங்கள்**

தொடர்பு கொள்ளவும்:
**ஆசிரியர்: நாகராஜன்**
16, பாரதீஷ்வரர் காலனி, 4வது தெரு, கோடம்பாக்கம்
பொன்மணிமாளிகை அருகில்,
சென்னை 600024, தமிழ்நாடு, இந்தியா
தொலைபேசி 7299992699/ 8939499598

# ஆ(ம)ஹா பாரதம்



ஜனமேஜயனின் யாகசாலையில் துவங்குகிறது பாரதம். நீண்ட காலம் நடைப்பெறக்கூடிய யாகம் ஒன்றை ஜனமேஜயன் தன் சகோதரர்களோடு சேர்ந்து செய்துக்கொண்டிருக்க; அந்நேரம் அங்கு ஒரு நாய் வந்தது அதைக் கண்டதும் சகோதரர்கள் அதனை அடித்து துரத்தி விட்டனர்.

அடிப்பட்ட நாய் தேவர்களின் நாயான தன் தாய் சரமாவிடம் சொல்ல; சரமா யாகம் நடைபெறும் இடத்திற்கு வந்து யார் என் குழந்தையை அடித்தது எனக் கேட்கிறாள்...

சகோதரர்கள் அதற்கு பதில் கூறா திருப்பதைப் பார்த்து கோபமடைந்த சரமா என் குழந்தையை நீங்கள் அடித்ததால் நீங்கள் கொஞ்சமும் எதிர்பாராத ஒரு பயம் உங்களை வந்து சேரும் என சாபமிட்டு விட்டு சென்றுவிடுகிறாள்.

வாழ்க்கை என்பது வரமும், சாபமும் கலந்திருப்பது. வரமற்ற சாபமோ, சாபமற்ற வரமோ ஒரு போதும் ஒருவருக்கு வாய்த்த தில்லை. அந்த இரண்டும் கூட தானே வந்து சேர்வதில்லை. நமது செயலால் நாமே அமைத்துக் கொண்டது.

இவ் விரண்டில் சாபம்தான் முத லாய் வந்து சேர்கிறது. அதன்பின் தான் வரம் ஊக்கமாய் வந்து வாய்க்கிறது.

நீண்டதொரு கோடைக்கு சிறு கொடையென வரும் மழையைப் போன்றது வரம். அம் மழை நீர் வெள்ளமாய் பெருக் கெடுத்து வரு வதைப் போன்றது சாபம்.

ம ஹா பா ர த் தி ன் து வ க் க மே வரத்தோடும், சாபத்தோடும் தான் துவங்குகிறது. ஜனமேஜயன் யாகம் செய் துக்கொண்டிருப்பது வரம்.

நாய் சரமா மூலம் தானாய் வந்து சேர்ந்தது சாபம்.

சாபம் பெற்ற மறுகணத்திலிருந்தே பயம் ஜனமேஜயன்ன பூரணமாய் கவ் விக் கொண்டது.

எந்த சொல்லும் மதிப்புடையதுதான். அது மேலும் மதிப்பை பெறுவது என்பது மேலோர் வாயிலிருந்து வெளியேறும் போது தான், எதற்கும் அஞ்சாதவன் தான் ஜனமேஜயன் என்றாலும் தேவர்களின் நாயான சரமாவின் சாபம் அவனை ஸதா துன்புறுத்திக் கொண்டேயிருந்தது.

பயம் எனும் சொல்லை அறியா திருந்த வன் அதற்குள் நூறைந்து பட்டம் பல பெற்று விட்டான். ஆனாலும் தொடர்ந்தது.

பயம் தீர வழி என்ன என்று யோசித்த வனாய அஸ்தினா புரத்திற்கு சென்றவன் அங்கு ஒரு காட்டிற்க்குள் வேட்டையாட களம் இறங்கினான்.

சாபமெனும் மாயை நீங்க வரம் தரும் முனிவனைத் தேடி அலைந்தான்.

அடுத்த இதழில் பார்ப்போம்...

- Thali, Ph:9600999279



பாகம் - பாகம் - பாகம் - பாகம் 2







அழகிய வடிவமைப்பில்

வார இதழ்கள்,
மாத இதழ்கள்,
பப்ளிகேஷன்ஸ்
புக் ஓர்க்,
அட்டைப்பட
வடிவமைப்பு,
நாளிதழ்கள்,
போன்றவை
தரமாகவும்
குறைந்த செலவில்
செய்துதரப்படும்

Bhaanrajg Graphics
செல்: +91-8825844033

ஆன்மிகமலர் மெயில் புக்



www.aanmeegamalar.com

# குருபெயர்ச்சியும் புஷ்கரமும்

"காவேரி புஸ்கரம்" என்றால் என்ன? அதன் சிறப்பு என்ன? என்பதைப் பற்றிப் பார்ப்போம்.

இந்தியாவில் புஷ்கரம் மிகப் பெரிய திருவிழாவாக கொண்டாடப்படுகிறது.

அதற்காக ஒரு புராண கதையும் கூறப்படுகிறது.

நவக்கிரகங்களில் (ஒன்பது கோள்களில்) ஒன்றாக குரு பகவான் பிரம்மனை நோக்கி கடும் தவம் செய்தார். அவரின் தவத்தை மெச்சிய பிரம்மன் தோன்றினார். குரு பகவானை நோக்கி "உனக்கு என்ன" வரம் வேண்டும் "என்று கேட்டார். அதற்கு பதிலளித்த குருபகவான்," "எனக்கு தங்களுடைய புஷ்கரம்தான் வேண்டும்" என்று கேட்டார்.

குரு பகவானின் விருப்பப்படியே தன்னிடமுள்ள புஷ்கரத்தை அவருக்கு அளிக்க ஒப்புக் கொண்டார் பிரம்மன்.

ஆனால் புஷ்கரம் பிரம்மனை விட்டுப் பிரிந்து குருவிடம் செல்ல மறுத்தது.

இதனால் தர்ம சங்கடமான பிரம்மன் புஷ்கரத்திற்கும் குரு பகவானுக்கும் இடையே ஒரு சமாதான உடன்படிக்கையை ஏற்படுத்தினார்.

அதன்படி மேஷ ராசி முதல் மீன ராசி வரை 12 ராசிகளிலும் அந்தந்த ராசிக்கு உகந்த புண்ணிய நதிகளில் புஷ்கரம் இருக்க முடிவு செய்யப்பட்டது.

அதன்படி புஷ்கரம்

மேஷம் ராசியில் (கங்கை நதியிலும்),
ரிஷபம் ராசியில் (நர்மதை நதியிலும்),
மிதுனம் ராசியில் (சரஸ்வதி நதியிலும்),
கடகம் ராசியில் (யமுனை நதியிலும்),
சிம்மம் ராசியில் (கோதாவரி நதியிலும்)
கன்னி ராசியின் போது (கிருஷ்ணா நதியிலும்),
துலாம் ராசியில் (காவேரி நதியில்)
விருச்சிக ராசியில் (தாமிரபரணி ஆற்றிலும்),
தனுசு ராசியின் போது (சிந்து நதியிலும்),
மகரம் ராசியில் (துங்கபத்திரா ஆற்றிலும்),
கும்பம் ராசியில் (பிரம்ம நதியிலும்),
மீனம் ராசியில் (பிரணீதா ஆற்றிலும்)

என குருபகவான் எந்தெந்த ராசியில் பெயர்ச்சி செய்கிறாரோ அந்தந்த நேரத்தில் புஷ்கரம் அங்கு தங்கி இருக்கும்.

அப்போது பிரம்மா, விஷ்ணு, சிவன், இந்திரன் முதலான முப்பது முக்கோடி தேவர்கள் எல்லாம் இந்நதியில் தங்கியிருப்பார்கள் என்று உடன்படிக்கை செய்யப்பட்டது.



மேற்படி 12 நதிகளில் குரு பகவான் பிரவேசிக்கும் நேரத்தில் 12 நாட்கள் தொடர்ந்து நீராடுவது இந்தியாவில்உள்ள அனைத்து புனித நதி களிலும் நீராடுவதற்கு சமம் என்று கூறப்படு கிறது. இம்முறை குரு பகவான் துலாம் ராசியில் வரும் செப்டம்பர் 12 அன்று பி ர வே சி ப் ப தா ல் காவேரி ஆற்றில் புஷ்கரம் கொண்டாடப்படுகிறது.

மேலும் இம்முறை கொண்டாடப்படும் காவேரி புஸ்கரம் என்பது 144 ஆண்டுகளுக்கு ஒரு முறை வரும் காவேரி மகா புஸ்கரம் ஆகும்.

அதனால் வரும் செப்டம்பர் 12 அன்று தொடங்கி செப்டம்பர் 24 அன்று காவேரி ஆதி புஷ்கரமாகவும்.

செப்டம்பர் 25 அன்று தொடங்கி அக்டோபர் 7 வரை அந்திம புஸ்கரமாகவும் கொண்டப்படுகிறது.

"கர்நாடகா" மற்றும் "தமிழ்நாடு" மாநிலத்தில் காவேரி புஷ்கரம் நடைபெறும் படித்துறைகள் வருமாறு.

**கர்நாடகா:**

தலைக்காவேரி - பாகமண்டலா
குஷால் நகர்
ஸ்ரீரங்கப்பட்டினம்
கிருஷ்ணராஜ் சாகர் அணை
மாண்டியா
ஷிவனசமுத்திரா
பன்னூர்
திருமாக்குடல் நரசிபுரா
தலக்காடு
முடுகுத்தூர்
கனகபுர்

**தமிழ்நாடு:**

மேட்டூர்
பவானி
பள்ளிப்பாளையம் ஈரோடு
கொடுமுடி
பரமத்தி வேலூர்
ஸ்ரீரங்கம் திருச்சிராப்பள்ளி
திருவையாறு
தஞ்சாவூர்
சுவாமிமலை)
கும்பகோணம்
மயிலாடுதுறை
பூம்புகார்

மேலுள்ள ஏதாவது இடங்களில் அல்லது காவேரி நதி பிரயோகிக்கும் ஏதாவது ஒரு இடத்தில், காவேரி புஸ்கரம் நடைபெறும் இந்த புண்ணிய தினங்களில் (செப்டம்பர் 12 முதல் அக்டோபர் 7 வரை) புனித நீராடி எல்லாம் வல்ல இறைவனின் அருள் பெறுவோம்.

– சிவனடிசீரே பரவுவார்
சிவ.இரா.சுப்பிரமணி
சைவ சித்தாந்த சபை
ஒசூர்.

● ஆன்மிகம் ● தத்துவம் ● உடல்நலம் ● பலன்கள்
புத்தம் புதிய ஆன்மீக செய்திகளை தினமும் படியுங்கள்
www.aanmeegamalar.com
ஆன்மிகமலர்.காம்
www.aanmeegamalar.com





மாதம் இரண்டு முறை இலவசமாக வெளிவரும் “ஆன்மிகமலர் மெயில் புத்தகம்” பெற உங்கள் இமெயில் முகவரியை கீழ்காணும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்
whats-app no: 7299992699
aanmeegamalar@gmail.com





# சிவக்கொழுந்தீசர் திருக்கோயிலில் குருவருளுடன் நடைபெற்ற பிரதோஷ விழா

குருவருள் என்பது மக்கள் வசிக்கு ஒவ்வொரு இடத்திற்கும் அவசியம் என்ற காரணத்தால்தான் யோகிகள், மகான்கள் போன்றோர் பல ஊர்க ளில் உள்ள ஆலயங்களை தரிசனம் செய்ய வருவது வழக்கமாக இருந்தது, அவ்வாறு அவர்களின் வருகையின் முக்கிய காரணம், மக்கள் வசிக்கும் இடங்களில் ஏற்பட்டிருந்த பாவம், தோஷம் போன்ற காரண காரியங்கள் இருந்த தடம் இன்றி மறைந்து போகவும், மேற்கண்ட கெடு பலன்களால், மக்கள் வசிக்கு இடங்களுக்கு பேராபத்து ஏதும் ஏற்படக்கூடாது என்ற காரணத்தால்தான் மகான்கள், ஞாளிகள், ஆதினங்கள் போன்றோர் ஒவ்வொரு ஊரில் வீற்றிருக்கு திருக்கோயில்களுக்கு வருகை தருவதை வழக்கமாக கொண்டிருந்தனர்.

இவ்வாறு அவர்களின் வாசம் இருக்கு ஊரில் கெடுபலன்கள் குறையும் என்பது ஐதீகம்.

இக்கருத்தை மையமாக வைத்து அருள்மிகு மாசிலாமணியீசர் பிரதோச வழபாட்டுக் குழுவினரால் 19.08.2017 அன்று சென்னை, மாங்காட்டில் உள்ள கொழுமணிவாக்கத்தில் எழுந்தருளியுள்ள கற்பகாம்பிகை உடனாகிய சிவகொழுந்தீஸ்வரர் திருக்கோயிலில், 50–ம் மாத பிரதோஷ வழிபாடு வெகு சிறப்பாக நடைபெற்றது.

இவ்விழாவில், திருக்கயிலாய பரம்பரை வேளாக்குறிச்சி (திருப்புகலூர்) ஆதின மரபின் வழி வந்த 18வது குருமகா சன்னிதானம் ஸ்ரீலஸ்ரீ சத்தியஞான மகாதேவ தேசிக பரமாச்சாரிய சுவாமிகளின் கலந்து கொண்டு அருளாசி வழங்கினார்.

மேலும் தருமையாதீனம் இளைய குருமகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ மாசிலாமணி தேசிக பரமாச்சாரியார் சுவாமிகள், சிதம்பரம் ஆதின கர்த்தர் ஸ்ரீலஸ்ரீ சுந்தரமூர்த்தி தம்பிரான் சுவாமிகள் ஆகியோரின் ஆசியுடன் விழா மிகச் சிறப்பாக நடைபெற்றது.

இவ்விழாவில், சிவபூஜை, சிவலோக ஆடலுடன் பன்னிரு திருமுறை பாராயணம், அடியார்களின் கயிலாய இசையுடன் திருமுறை திருவீதிஉலா, பிரதோசத்தின் அருமை பெருமைகளைப் பற்றிய சொற்பொழவு, பரதநாட்டிய நிகழ்ச்சி போன்றவை வெகு சிறப்பாக நடைபெற்றது.

ஆன்மீக அன்பர்களின் அன்னதானம், கலை நிகழ்ச்சிகளும் சிறப்பாக நடைபெற்றது.

– வாசுதேவன் 9444535099

Owned, Published by C.NAGARAJAN. Design by BHAANRAJAGRAPHICS, CHENNAI. Published from New No.16, Old No.18, Bharatheeswarar Colony, 4th Street, Kodambakkam, Chennai - 600 024.
Editor : C.Nagarajan,
E-mail: aanmeegamalar@gmail.com Website: http://www.aanmeegamalar.com Cell: 7299992699


ஆன்மிகமலர் மெயில் புக்

# தீயவர்களோடு பழக நேர்ந்தாலும் நல்லவர்கள் ஒழுக்கத்தை இழக்க மாட்டார்கள்

- சிலர் காலை மடக்கி உட்காருதல், ஒற்றைக் காலில் நிற்றல் இதைத்தான் யோகாசனம் என்று எண்ணிக் கொண்டிருக்கிறார்கள். உண்மையான யோகம் என்பது உயர்ந்த அன்புணர்வோடு இறைவனோடு நம்மை இணைத்துக் கொள்வதாகும்.
- மனதை அலைபாய விடாமல் தடுப்பது யோகம். அவ்வாறில்லாமல் அலைபாய விட்டால் உண்டாகும் ரோகம். இன்றைய மனிதன் புலனடக்கம் இல்லாததால் உலக சுகங்களில் மூழ்கி தன்னையே இழந்து கொண்டிருக்கிறான்.
- அன்பால் இதயத்தை நிறைத்திருக்கும் மனித னையே இறைவன் விரும்புகிறார். உண்மையோடும், பக்தியோடும் இருக்கும் மனிதர்களை இறைவனே தேடிவந்து விடுவார். அவர்களின் தேவைகளை நிறைவேற்றி அருள்வார்.
- தாய் தன் குழந்தைகளின் தேவைகளை கேட் காமலே, வலிந்து செய்வது போல நாமும் பக்தியில் இறைவனின் குழந்தைகளாக மாறுவோம்.
- தனித்து வாழாதீர்கள். ஒதுங்கி போகாதீர்கள். மனம் விட்டு பேசுங்கள். ஒற்றுமை உணர்வுடன் எல் லோருடனும் உறவாடுங்கள். பரஸ்பர அன்பினால் நம் வாழ்வு ஒளியுடையதாகும் என்ற உண்மையை உணருங்கள்.
- கைகளின் அழகு வளையல்களில் இல்லை. அள்ளிக் கொடுப்பதில்தான் இருக்கிறது. இயலாதவர் களுக்கு கொடுத்து உதவுவோர்கள் தங்களை புனிதப்படுத்திக் கொள்கிறார்கள்.
- கடவுளிடம் சரணாகதி அடைவது என்பது நம்முடைய செயல்களை எப்படியோ இறைவன் பார்த்துக் கொள்வான் என்று விட்டுவிடுவதல்ல. கடவுள் நம்மை செயலற்றுப் போகச்செய்ய விரும்ப வில்லை. மாறாக நம்மை நாமே உணரவேண்டும் என்றே விரும்புகிறார்.
- தனிமையில் இறை சிந்தனையோடு ஒன்றுவது கடினமான செயல். ஆனால் பலர் கூடி பாடி வழிபடும் போது மனம் இறைசிந்தனையில் எளிதாக ஈடுபடும்.
- நாக்கு கூர்மையான பற்களுக்கு நடுவில் கடி படாமல் லாவகமாகச் செயலாற்றுவது போல், உலகில் தீயவர்களோடு பழக நேர்ந்தாலும் நல்லவர்கள் ஒழுக்கத்தை இழக்க மாட்டார்கள்.
- தியாகம் என்பது வேறு. ஒன்றை வெறுப் பது என்பது வேறு. ஒரு பொருளின் முழு மதிப்பையும் உணர்ந்து அது கிடைத்தும் எனக்கு வேண்டாம் என்று சொல்வது தியாகம்.

– சாய்பாபா

